
Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 21 இதழ் - 8 ஆகஸ்டு 2008




## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030, Cell : 98427 - 30382, 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

## TV PROGRAM




## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. சுவிசேஷ அழைப்பு ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 20
6. சாத்தானுடைய தந்திரங்கள் நமக்கு தெரிந்திருக்கிறதா? ........ 22
7. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 26
8. இரத்த சாட்சிகள் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 21 AUGUST - 2008 Issue - 8**

ஆசிரியர் உரை

## "செலோத்தே என்னப்பட்ட சீமோன்"

"**தி**ருமறை ஆசான்" மாத இதழை ஆர்வத்தோடும், அக்கறை யோடும் மாதம் தவறாமல் படித்துப் பயன்பெற்று வரும் வாசக அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் உண்மை நன்றாகத் தெரிந்திருக்கும். அது, நமது ஆசான், கடந்த 15 ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வரும் ஒரு மாறாத வழக்கம். ஆம், ஒவ்வொரு வருடமும் ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில், பரிசுத்த ஆவியானவரால் வேதாகமத்தின் பக்கங்களில் வெளிச்சம் போட்டுக் காட்டப் பட்டிருந்தும், நம்மால் கேட்பாரற்று விடப்பட்ட ஒருவரைக் கவனமாகத் தேடிக் கண்டுபிடித்து, அவருடைய பக்திப் பண்புகளைப் பட்டை தீட்டி, வாசகர் களாகிய உங்கள் கண்களுக்கு முன்பாகக் கம்பீரமாக நிறுத்தி, ஆஹா என்று உங்களால் அவர்களை ஏற இறங்கப் பார்க்க வைப்பது. இப்பணிக்குக் கடந்த வருடங்களில் பலத்த வரவேற்பும், பலமான பாராட்டும் கிடைத்தது மட்டு மல்லாமல், இவர்களையெல்லாம் இணைத்து, "ஓர் நூலாக" ஏன் வெளியிடக் கூடாது என்ற கேள்வியும் இருந்து வருகிறது.

நம்மால் புறக்கணிக்கப்பட்ட இம்மாமனிதர்களின் வரிசையில் போன வருடம் தன்னை இணைத்துக் களை கட்டியவன் **கிங் மேக்கர் யோய்தா.** இவ்வருடம், இச்சீர்மிகு வரிசையில் சேர்க்கப்படும் தகுதியுடையவனாக நம்மால் கண்டெடுக்கப்பட்டிருப்பவன் **செலோத்தியனாகிய சீமோன்.** இவன் பற்றி வேதாகமத்தில் பெரிதாக ஒன்றுமேயில்லை. இயேசு ஆண்டவரின் சீடர்கள் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கும் இரண்டு நற்செய்தி நூல்களில், "கானானியனாகிய சீமோன்" என்றும் (மத். 10:4, மாற் 3:18) எல்லாவற்றையும்

திட்டமாய் விசாரித்து எழுதின லூக்காவால் "செலோத்தியனாகிய சீமோன்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளான் (லூக். 6:15, அப். 1:13) அவ்வளவு தான். மற்றபடி, இவன் வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசினதாகவோ அல்லது தேவ நாமத்தின் பேரில் ஒரு செயலைச் செய்ததாகவோ வேதாகமத்தின் எந்த ஒரு மூலையிலும் இல்லை.

ஆனாலும், இவனை ஒரு கிடைத்தற்கரிய பாக்கியம் பெற்றவன் என்றே சொல்ல நான் விரும்புகிறேன். இதற்குக் காரணம், இவனது குடிப் பிறப்போ, படிப்போ, பணமோ, செல்வமோ அல்லது செல்வாக்கோ அல்ல. மாறாக, இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்டு, அழைக்கப்பட்டு, அவரோடு கூட 3 ஆண்டுகளுக்கும் மேலாக சுற்றித்திரிந்து உண்டு, உறங்கி, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட வல்லமையுள்ள வார்த்தைகளைக் கேட்கவும், அவரால் நடப்பிக்கப்பட்ட தெய்வீக செயல்களைப் பார்க்கவும் சிலாக்கியம் பெற்றிருந்ததே. இது ஒன்று போதாதா அவனைப் பாக்கியம் பெற்றவன் என்று நாம் வாய் நிரையச் சொல்லுவதற்கு.

புதிய ஏற்பாட்டில் மொத்தம் 9 சீமோன்கள் உண்டு. பேதுருவும் ஒரு சீமோன் தான். ஆனால், இந்த செலோத்தியன் தவிர்த்து, ஏனைய எட்டு சீமோன்கள் பற்றி எழுதுவதற்குப் போதுமான காரணங்கள் உண்டு. பக்கம் பக்கமாக மாத்திரமல்ல, ஒரு சிலர் பற்றி சிறு நூல்களாகக் கூட வெளியிடத் தேவையான விவரங்கள் உண்டு. ஆனால், இவன் பற்றி சிறு தடயம் கூட இல்லை. ஆனாலும், என்ன? கிடைத்ததை வைத்து நாம் வித்தை செய்து பழக்கப்பட்டிருக்கிறோம் தானே. முயன்று பார்ப்போம்.

அதற்கு முன், மற்ற எட்டு சீமோன்களுக்கும் இல்லாத வகையில் இவனுக்கு, "செலோத்தே" என்ற வார்த்தை, இவன் பெயரோடு ஒரு பட்டமாக ஒட்டி வருவதால், அதற்கான காரணம் என்ன என்று தெரிந்து கொள்வது நல்லது.

"செலோத்தோ" என்ற வார்த்தைக்கு "வைராக்கியம் கொண்டவன்" என்று பொருள். யூத மார்க்கத்தில் இருந்த பிரிவுகளில் இந்த செலோத்தியர்கள் மிகவும் வைராக்கியமானவர்கள். இவர்களை சக யூதர்கள் **அடிப்படை வாதிகள்** என்றழைப்பர். இவர்களது நடவடிக்கைகள் ஓர் அரசியல் கட்சியின் செயல்பாடுகளை ஒத்ததாக இருக்கும். பரிசேயர்களுக்கு மோசேயின் பிரமாணங்களில் இருந்த ஆழ்ந்த பிடிப்பு பற்றி புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் அழுத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதினிமித்தம் அப்போஸ் தலன் பவுலடியார் கூட தன்னை ஒரு **பரிசேயன்** என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டுள்ளார் (பிலி. 3:5). ஆனால், இப்படிப்பட்ட பரிசேயர் களையே "அதிக சகிப்புத் தன்மை கொண்ட மிதவாதிகள்" என்று செலோத் தியர்கள் சாடுவர். அப்படியானால், இவர்கள் தங்கள் கொள்கைகளில் எவ்வளவு தீவிரத் தன்மையுடையவர்களாக இருந்திருப்பார்கள் என்று யூகித்துக் கொள்ளுங்கள்.

செலோத்தியர்களின் இந்த இயக்கம், முதல் நூற்றாண்டு வரலாற்று ஆசாரியனாகிய "ஜோசபஸ்" ன் கூற்றுப்படி, கலிலேயாவைச் சேர்ந்த **யூதாஸ்** என்பவரின் தலைமையின் கீழ், **இஸ்ரவேலை ஆளும் ராஜாவாக தேவன் இருக்கும் போது,** ரோம சாம்ராஜ்யத்தின் இராயனுக்கு வரி செலுத்துவது, தேவனுக்குச் செய்யும் துரோகம் எனக் கருதி, அதைக் கடுமையாக எதிர்த்துப் புரட்சி செய்துள்ளது. இந்த செலோத்தியர்கள் தங்கள் செயல்பாட்டிற்கு முன்னோடியாக, இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையிலான காலத்தைச் சேர்ந்த, "மத்தியா"வையும், அவன் குமாரர்களையும் ஏற்றுக் கொண்டனர். மத்தியாவின் வழி வந்தவர்கள் தான் புகழ் பெற்ற மக்கபேயர்கள். இந்த மத்தியா, வேதாகமத்தின் "மௌன காலத்தில்" யூத மார்க்கத்திற்கு, "நான்காம் அந்தியோகு" என்பவனால் பேராபத்து வந்த போது, வீரத்துடன் எதிர்த்துப் போராடியவன். மத்தியாவின் அந்த புரட்சிக் கனலை ஒரு மந்திர சக்தியாக தங்கள் மனதின் மத்தியில் இருத்தி இந்த செலோத்தியர் காரியமாற்றினார். ரோம அரசாங் கத்தின் இரும்புக் கரங்களால் இவர்களது கலகம் கி.பி. 6ல் அடக்கப்பட்டாலும், அவர்களுக்குள்ளாக இருந்த அந்த வேட்கை அடுத்த 60 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்தது என்று வேதாகமம் அல்லாத பிற சரித்திரம் சொல்லுகிறது. இதுதான் இவர்களின் கொள்கை முழக்கம். "**யெகோவா வைத் தவிர வேறொரு தேவன் இல்லை, தேவாலயம் தவிர வேறு எதற்கும் வரி இல்லை. சக செலோத்தியன் தவிர நண்பன் யாருமில்லை**". இந்தளவு கொள்கைப் பிடிப்பு வேறு எந்த ஒரு சாரருக்கும் இருந்ததாக வேதாகமம் எங்கும் நாம் காண முடியாது.

இவர்களின் செயல்பாடு பற்றி பிற சரித்திரம் மேலும் இவ்விதம் கூறுகிறது. இவர்கள் ரோம அரசாங்கத்தை எதிர்த்து கொரில்லா போர் நடத்தியதோடு, ரோம அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களை **சதி செய்து** கொலை செய்வார்களாம். ரோமர்களை மாத்திரமல்ல, வரி செலுத்தும் காரியத்தில், ரோமர்களுக்கு ஆதரவாக உள்ள யூதர்களையும் விட்டு வைக்கமாட்டார் களாம். நம் அண்டை நாட்டு விடுதலைப் புலிகளே பரவாயில்லை போலல்ல வா தெரிகிறது. இயேசு ஆண்டவரிடம் "நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை" என்று (லூக் 23:14) சொல்லி இயேசுவை விடுதலையாக்க பிலாத்து மனதாயிருந்த போது, ஜனங்க ளெல்லாரும் "இவனை அகற்றும், **பரபாசை** எங்களுக்கு விடுதலையாக்கும்" என்று ஏகமாய் சத்தமிட்டார்களல்லவா, அந்த "பரபாஸ்" ஒரு செலோத்தி யனாக இருக்க பெரும் வாய்ப்புண்டு (மாற் 15:7).

இப்படிக் குற்றப் பரம்பரையில் வந்த சீமோன், இயேசுவின் கீர்த்தியைக் கேட்டு, வந்து, அவரைப் பின்பற்றிய எண்ணிலடங்காத சீடர்களில் ஒருவனாக இருந்துள்ளான் என்றே தெரிகிறது (மத். 4:23,25). இயேசு, இவனை அப்போஸ்தலனாக இருக்கும்படி தெரிந்து கொண்டு (மத். 10:1-6) யூதர்களிடம் அனுப்பினார். இதன் மூலம், அவன் தன்னைப் பின்பற்றி வரத் தீர்மானித்த போது, அவனுக்குள்ளாக இயல்பாகவே இருந்த **கனல்** அப்படியே அணைந்து போகச் செய்யாமல், அது மேலும் கொழுந்து விட்டு

எரியும்படியாகவே செய்துள்ளார் (மத். 10:34-38). ரோம அரசாங்கத்திற்காக **வரி வசூல் செய்த மத்தேயு** (மத். 9:9). வரிவசூலைக் கடுமையாக எதிர்த்த இந்த சீமோன், இப்படி எதிரும், புதிருமாக இருந்தவர்களைத் தன் சீடர் படையில் சேர்த்துக் கொண்டதின் மூலம், தான் ஆரம்பிக்க இருக்கும் சபையாகிய ராஜ்ஜியம் எப்படிப்பட்டதாக இருக்கும் அல்லது இருக்க வேண்டு மென்பதை ஆரம்பத்திலேயே கோட்டிட்டுக் காட்டியுள்ளார்.

செலோத்தே என்னப்பட்ட சீமோனின் ஊழியம் பற்றி நேரிடையாக வேதாகமத்தின் பக்கங்களில் ஒன்றுமில்லையென்பது உண்மையாக இருந்தாலும், இவன் ஊழியத்தை நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. பெந்தெகொஸ்தே நாளில் எருசலேம் நகரில் 3000 பேர் இரட்சிக்கப்பட்டதில் இவனுக்கும் பங்குண்டு. பேதுருவோடு கூட நின்ற 11 பேரில் இவனும் ஒருவனாகவே இருந்துள்ளான் (அப். 2:14). மேலும், அவர்கள் (அப்போஸ் தலர்கள்) புறப்பட்டுப்போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள் (மாற். 16:20) என்றுள்ளது. ஆகவே, இவன் ஊழியத்தில் சளைத்தவனாக இருந்திருக்க வாய்ப்பில்லை. எப்படிப்பட்ட மனிதனை இயேசு தனக்காகப் பயன்படுத்தி யிருக்கிறார் என்று பாருங்கள்!

வேதாகமம் அல்லாத, அதே சமயம் நம்பத்தகுந்த சரித்திரங்கள், இவன் ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான எகிப்துக்கும், ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும் சென்று நற்செய்தி அறிவித்தான் என்று பலமாகச் சாட்சியிடுகிறது. இறுதியாக, பெர்சியா வந்து நற்செய்தி அறிவித்த போது, பிடிக்கப்பட்டு, இரத்த சாட்சியாக மரித்தான் என்று நாம் ஒவ்வொருவரும் நம் புருவத்தை உயர்த்தும்படியான அளவில் கூறுகிறது.

சரி இப்பொழுது, இந்த செலோத்தே என்னப்பட்ட சீமோனிடமிருந்து, நமக்கு என்ன பாடங்கள் கிடைக்கிறதென்று பார்ப்போம்.

### I. செலோத்தியன் பராம்பரியத்தை தூக்கி எறிந்தான்.

வைராக்கியம் நிறைந்த செலோத்தியனிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், இவன் இயேசுவுக்காகத் தன் பாரம்பரியத்தையும், பழக்க வழக்கங்களையும் தூக்கி எறிந்தான் என்பது.

ஆவியானவர் வேத வசனங்களில், ஏன் இவனை செலோத்தியன் என்று குறிப்பிட்டார் என்பதற்கான காரணங்களைப் பார்த்தோம். சீமோன் புகழ் பெற்ற மனிதனாகிய மத்தியா என்பவனின் பாரம்பரியத்தில் வந்து, யெகோவாவுக்காகத் தீவிரமான செயல்பாடுகள் கொண்ட பழக்கங்களை உடையவனாக இருந்தான். ஆயினும், இயேசு ஆண்டவரின் ஊழியத்தையும், உபதேசத்தையும், வல்லமையையும் கண்டு, தன்னை அவருடைய சீஷனாக்கத் தீர்மானித்தான். இத்தனைக்கும், இயேசு ஆண்டவர் இவனைத் **தேடிச் சென்று** அழைத்ததாகவோ அல்லது தான் போகிற வழியில் கண்டு அழைத்த பேதுரு, அந்திரேயா (மாற் 1:16), யோவான், யாக்கோபு (மாற் 1:20) மற்றும் மத்தேயு (மத். 9:9) போன்று இவனையும் **வழியில் கண்டு**

அழைத்ததாகவோ நமக்கு வேதாகமத்தில் இல்லை. ஆகவே, இவனாக இயேசுவைத் தேடி வந்த போது, அவன் உள்ளத்தின் கிடக்கைகளை அறிந்த இயேசு, இவனைத் தன் 12 சீடர்களில் ஒருவனாக இருக்கும்படி தெரிந்து கொண்டார் என்றே தெரிகிறது.

இயேசுவைப் பின்பற்ற இவன் எண்ணங் கொண்ட போது, நிச்சயமாகவே அவனது **பாரம்பரியமும், பழக்கவழக்கங்களும் ஒரு பெரும் சவாலாகவே இருந்திருக்கும்.** மத்தியாவின் தலைமையை ஏற்று மக்கபேயர்களின் வழி வந்தவர்கள் என்பது அந்நாட்களில் கௌரவத்தைத் தந்த ஒன்று. அதைத் துறப்பதென்பது ஒரு சாதாரண செயல் அல்ல. அத்தோடு, யெகோவாவுக்காகவும், தேவாலயத்துக்காகவும் மிகவும் வைராக்கியமாக வாழ்ந்து விட்டு, அவ்வைராக்கியத்தின் முனையை மழுங்கச் செய்வதும் எளிதில் சீரணிக்கக் கூடிய ஒன்று அல்ல. ஆனாலும் கூட கிறிஸ்துவுக்காக அவைகளைத் துறந்தான். பாரம்பரியத்திற்குப் பாடை கட்டியதோடு தன் பழக்க வழக்கங்களையும் குழிதோண்டிப் புதைத்தான். இத்தனைக்கும் இவன், "கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டம் என்று விட்டேன்" என்ற பவுலடியாரின் வார்த்தைகளை (பிலி. 3:18) நம்மைப் போல படித்திருக்கவில்லை.

இன்றைக்கு நம்மில் எத்தனை பேர், இந்த செலோத்தியனாகிய சீமோனைப் போல், கிறிஸ்துவுக்காக நம்முடைய ஆகாத பாரம்பரியத்தையும், சத்தியத்திற்கு மாறான பழக்க வழக்கங்களையும் விட்டு விடவும், தூக்கி எறியவும் தயாராக இருக்கிறோம்? சொல்லுங்கள். பாரம்பரியம் தேவனுடைய கட்டளைகளை அவமாக்கத்தான் வழி வகுக்கிறதேயொழிய (மத். 15:6), மற்றபடி நிறைவேற்றுவதற்கு உதவுவதில்லை. இயேசுவின் நாட்களிலும் அது தான் உண்மை. நம்முடைய நாட்களிலும் அது தான் உண்மை. இந்த உண்மையை அறிந்த ஆவியானவர், பவுலடியாரைக் கொண்டு கொலோசெயருக்கு இவ்விதம் எழுதியுள்ளார். லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். **அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும்** உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல என்று (கொலோ 2:8).

**வேத வசனங்களை அவமாக்கி, நம்முடைய ஆத்துமாக்களைக் கொள்ளை கொண்டு போகும் பாரம்பரியம்** நமக்கு அவசியமா என்று எண்ணிப்பாருங்கள். அவசியமில்லை என்பது நம்முடைய பதிலாக இருக்குமானால், இன்னும் ஏன் அதைப் பிடித்துக் கொண்டு, நம்முடைய ஆத்துமாக்களை நரகத்தின் பாதையில் நடத்திக் கொண்டுள்ளோம்? கோபுரங்கள் கொண்ட கட்டிடங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும், பண்டிகைகள் கொண்டாடுவதும், ஆராதனைகளில் தூபங் காட்டுவதும், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதும், பாதிரிகள் அங்கிகள் அணிந்து கொள்வதும், இரட்சிப்புக்கான வழி என்று விதவிதமாகப் போதிப்பதும் பாரம்பரியங்களல்லாமல் வேறென்ன?

ஓ, கிறிஸ்தவமே, கிறிஸ்துவைப் பாருங்கள், பவுலைப் பாருங்கள், பேதுருவைப் பாருங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்த நிலை போய், இந்த **செலோத்தியனாகிய சீமோனையாவது பாருங்கள்** என்று கெஞ்ச வேண்டிய நிலை வந்து விட்டதே. இது குறித்து என்ன சொல்லுவது? பாரம்பரியத்திற்கு முடிவு கட்டுவதில் இந்த செலோத்தியன் வழி நடக்க நாம் ஒவ்வொருவரும் தீர்மானிப்போம்.

### II. செலோத்தியன் அழைப்பை ஏற்றுக் கொண்டான்

வைராக்கியம் நிறைந்த செலோத்தியனிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், இவன் இயேசுவின் அழைப்பைத் துணிந்து ஏற்றுக் கொண்டான் என்பது.

செலோத்தியனாகிய சீமோன் இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கொண்டதை நாம் யாரும் அற்ப சொற்பமாக எண்ணி விடக்கூடாது. சொல்லப் போனால், மற்ற 11 பேரைக்காட்டிலும், இவன் இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கொள்ளக் கொடுக்க வேண்டிய விலை மிகவும் பெரிதாயிருந்தது. ஆம், பேதுருவும், அந்திரேயாவும், இயேசுவின் அழைப்பை ஏற்றுக்கொள்ள "வலைகளை" விட வேண்டியிருந்தது (மாற் 1:18), யோவானும், யாக்கோபும் "வலைகளையும், படவையும், தகப்பனையும், கூலியாட்களையும்" (மாற் 1:20) விட வேண்டியிருந்தது, ஆயத்துறையில் இருந்த மத்தேயு தன் வருமானத்தையும், அரசாங்க வேலையையும் விட வேண்டியிருந்தது (மத்.9:9). ஆனால், இந்த சீமோன், இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கொள்ள, ஆபிரகாம் ஈசாக்கை மனதிலே பலியிட்டது போல, மனதளவில் தன் உயிரையே விட வேண்டியிருந்தது என்றால், அது மிகையல்ல.

எப்படியெனில், செலோத்தே இயக்கத்தார், தங்களுக்கு ஆகாதவர்களைச் **சதி செய்து கொல்லுவதில்** தேர்ந்தவர்கள். அதிலும் குறிப்பாக, துரோகிகள் என்றால் கேட்கவே வேண்டாம். கங்கணம் கட்டி ஒழித்தே விடுவார்கள். ஆனால், இந்த சீமோன் அது பற்றிக் கொஞ்சமும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்ற வசனத்தின் (பிலி. 1:21) பொருள், இயேசுவின் தியாக மரணத்திற்குப் பின் வாழும் நமக்கு இன்னும் முழுமையாக விளங்காமல் இருக்கும் போது, இந்த சீமோனுக்கு இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கொள்ளுவதற்கு முன்பாகவே புரிந்திருக்கிறது. புதிய ஏற்பாட்டில், ஆசாரியர்கள், அதிகாரிகள் என்று பலர் இயேசுவின் சுவிசேஷத்தை ஏற்றிருக் கிறார்கள் (அப். 6:7,17:34) ஆனால், இவனல்லாமல், இன்னொரு செலோத்தியன் இயேசுவையோ, அவருடைய சுவிசேஷத்தையோ ஏற்றுக்கொண்டதாக எங்கும் சொல்லப் படவில்லை. அப்படியானால், இயேசுவின் அழைப்பை ஏற்றுக்கொள்வதற்காக இவன் கொடுத்த **விலையை** எண்ணிப்பாருங்கள்.

நம்மில் எத்தனை பேர் இயேசுவுக்காக, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக, அவர் கட்டின ஒன்றான மெய்ச் சபைக்காக விலை கொடுக்கத் தயாராக உள்ளோம்? இயேசு ஆண்டவர், ஒருவன் தன்னைப் பின்பற்ற வேண்டுமானால் அவன் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டுமென்று

வெளிப்படையாகவே சொல்லியுள்ளார். லூக்கா நற்செய்தியாளன் இது பற்றிக் கூறுவதைப் பாருங்கள். "**பின்பு அவர் எல்லாரையும் நோக்கி; ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்**" (லூக். 9:23). இன்றைக்கு நம்மில் எத்தனை பேர் சீஷத்துவத்திற்கான இந்த விலையைப் புரிந்து கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம்? இது மாத்திரமா இயேசு சொன்னார். மத்தேயு ஆசிரியர் கூறுவதையும் கவனியுங்கள். "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல, மகனையாவது, மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல" (மத். 10:37,38). இயேசு ஆண்டவர், இவ்வசனங்களில் **தனக்குப் பாத்திரன் யார் என்று மிகத் தெளிவாகவே வெளிப்படுத்திவிட்டார்.** இதற்கு மேல், அவரைப் பின்பற்று வதற்கான விலைக்கு, விளக்கம் வேண்டுமென்று யாரும் எதிர்பார்க்க முடியாது. அப்படித்தானே.

ஆனால், நம்முடைய நிலைமை எப்படியுள்ளது? கிறிஸ்துவானவர் சுவிசேஷத்தின் மூலம் கொடுக்கும் அழைப்பை (2 தெச. 2:14) ஏற்றுக் கொள்வதற்கும், அதன் பிறகு, அந்த சுவிசேஷத்தின் சத்தியத்தின்படி வாழ்வ தற்கும் கொடுக்க வேண்டிய விலையை கொடுக்க நாம் தயாராக உள்ளோமா? நம்மில் எத்தனையோ பேர் சுவிசேஷத்தின் அழைப்பை ஏற்றுக் கொள்வதற்கு ஏதாவதொரு நொண்டிச் சாக்கு சொல்லுகிறவர்களாகத் தானே உள்ளோம்? அதை விட கேவலம், நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவனாக வாழ்கிறேன் என்று தம்பட்டம் அடிப்பவர்கள் கூட, **விலை கொடுக்க வேண்டிய நேரம் வரும் போது,** எனக்கு சாதி தான் பெரிது, எனக்கு சொந்தம் தான் பெரிது, எனக்கு குடும்பம் தான் பெரிது, எனக்கு பெற்றோர்கள் தான் பெரிது, எனக்கு உடன் பிறந்தவர்கள் தான் பெரிது என்று எண்ணி செயல்பட்டு கிறிஸ்துவை மீண்டும் சிலுவையில் அறைவதோடு, தேவனு டைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, (எபி. 10:29) அவர் தம் குருதி சிந்தி சம்பாதித்த சபையைக் கூறுபோடுகிறவர்களாக இருக்கிறோமே?.

அன்பானவர்களே, இப்படி வேத வசனங்களுக்கு மாறாகச் செய்கிற வர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தங்களை சார்ந்தவர்களுக்கு வேண்டு மானால் பாத்திரராக இருக்கலாம். ஆனால் **கிறிஸ்துவுக்கு பாத்திரராக இருக்க முடியாது.** கிறிஸ்துவுக்கு பாத்திரனாக இல்லாத ஒருவன் அந்நாளில் "அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள்" (மத். 7:23) என்றே சொல்லப்படுவான். இதில் யாருக்கும் எவ்வித சந்தேகமும் தேவை யில்லை ஆகையால், நாம் ஒவ்வொருவரும் சீமோன் போல் அவர் அழைப்பை ஏற்று அதற்கான விலை கொடுக்கிறவர்களாக வாழ வேண்டும்.

### III. செலோத்தியன் உபதேசத்தில் நிலைத்திருந்தான்

வைராக்கியம் நிறைந்த செலோத்தியனிடமிருந்து நமக்கு கிடைக்கும் இன்னுமொரு பாடம், இந்த செலோத்தியன் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருந்தான் என்பது.

ஒருவேளை நீங்கள் கேட்கலாம், எப்படி இப்படிச் சொல்ல முடியும்? என்று. உங்கள் கேள்வியில் நியாயம் இல்லையென்று நான் சொல்ல மாட்டேன். ஆனால், வேத வசனங்களை நாம் கவனித்துப் படிக்கும்போது, செலோத்தியன் என்னப்பட்ட சீமோன் பின்வாங்கிப்போனான் என்று ஆவியானவர் எங்கும் வெளிப்படுத்தாததால், இவன் நிலைத்திருந்திருக்கவே அதிக வாய்ப்புண்டு. இவன் வாழ்க்கை பற்றி பிற சரித்திரம் அல்லாமல் ஆவியானவரின் கூற்றையே கொஞ்சம் கவனியுங்கள். இயேசுவானவர் மரித்து, குறைந்தது 50 ஆண்டுகள் கழித்துதான் யோவான் நற்செய்தி நூல் எழுதப்பட்டுள்ளது. அந்நூலின் 17ம் அதிகாரத்தில் சிலுவைக்கு முன் கெத்சமனே தோட்டத்தில் கண்ணீரோடு இயேசுவானவர் ஜெபித்த ஜெபம் இடம் பெற்றுள்ளது. அவ்வதிகாரத்தில் 12ம் வசனத்தின் கடைசிப்பகுதி **"கேட்டின் மகன் கெட்டுப்போனனேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப் போகவில்லை"** என்று கூறுகிறது.

ஒருவேளை இந்நூல் எழுதப்பட்டபோது இந்த செலோத்தியன் பின்வாங்கிப்போயிருந்தால், ஆவியானவர் இப்படி எழுத அனுமதித்திருக்க மாட்டார் என்றே நம்புகிறேன். இங்கு மாத்திரமல்ல, வேறெங்குமே யூதாஸ் தவிர வேறெந்த அப்போஸ்தலனும் விழுந்து போனான் என்று நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ கூறுவது இல்லை. இப்படி அவன் நிலைத்திருந்ததற்குக் காரணம், அவன் இயேசுவின் அழைப்பை ஏற்றுக்கொண்டபோதே ஒரு தீர்மானமுடையவனாக இருந்து, அதற்காகத்தான் கொடுக்க வேண்டிய விலையில் தெளிவுள்ளவனாக இருந்துள்ளான்.

ஆம், தான் முன்பு போராடியது இவ்வுலக ராஜ்யத்திற்காக இருந்தாலும் இயேசுவின் **ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல** என்ற போதனையைப் புரிந்தவனாக இருந்துள்ளான் (யோவான் 18:36). "சத்துருக்களைச் சதி" செய்து கொலை செய்வது தனது பாணியாக இருந்தாலும், **"சத்ருக்களை சிநேகியுங்கள்"** என்ற மலைப் பிரசங்கத்தின் உபதேசத்தை ஏற்று நடந்துள்ளான் (மத். 5:44) பட்டயத்தை எடுப்பது தான் வீரத்தின் அடையாளம் என்பது அவன் நம்பிக்கையாக இருந்தாலும், "பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்" (மத். 26:52) என்று இயேசு சொன்ன போது, பொட்டி பாம்பாக அல்லவா ஒடுங்கி ஓரத்தில் நின்றிருந்திருப்பான். இவன் பார்க்காத பட்டயத்தையா அன்று பேதுரு எடுத்திருப்பான்? வாய்ப்பே இல்லை.

சரி, இவன் சத்தியத்தில் நிலைத்திருந்ததற்கான காரணங்கள் புரிகிறதா? **சுவிசேஷ அழைப்பை ஏற்றுக் கொள்ளும் போதும், அந்த சுவிசேஷத்தின் உபதேசத்திற்கு நம்மை ஞானஸ்நானத்தின் மூலம் கீழ்ப்படுத்தும் போதும், நாம் என்ன செய்கிறோம், என்ன செய்ய போகிறோம் என்பதில் ஒரு தெளிவு வேண்டும்.** வெறுமனே ஒரு வறண்ட பாவி நனைந்த பாவியாக மாறுவதில் எவ்வித பிரயோஜனமும் இல்லை.

ஆனால், அருமையானவர்களே, நம்முடைய நாட்களிலுள்ள கிறிஸ்தவத்தின் நிலை எப்படியுள்ளது? எத்தனை பேர் கிறிஸ்துவையும், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தையும், கிறிஸ்து தம் இரத்தம் சிந்தி

(அப். 20:28) சம்பாதித்த சபையையும் உண்மையாக அறிந்து, அதனடிப் படையில், கிறிஸ்தவர்களாக உள்ளார்கள்? எப்படி நீங்கள் ஒரு கிறிஸ்தவன் என்று கேட்டால், பாரம்பரியப்படியும், பெற்றோர் எனக்கு இட்ட பெயரின் படியும், என்னுடைய சபையில் எனக்கு போதிக்கப்பட்டதின்படியும், அல்லது தனக்குக் கிடைத்த அனுபவத்தின் படியும் நான் ஒரு கிறிஸ்தவன் என்று தானே கூறுகிறார்கள். கிறிஸ்தவத்தின் இப்பதில்களை வேத வசனங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால், மனசாட்சி உள்ளவர்கள் வெட்கத்தால் தலையைக் கீழே தான் போட்டுக் கொள்ள வேண்டும். நான் கூறும் இக்கருத்தை யதார்த்த வாதிகள், மனம் கோணாமல் ஏற்றுக்கொள்வார்கள்.

இந்த இழி நிலையிலிருந்து கிறிஸ்தவம் விடுபட்டு எண்ணிலடங்கா "செலோத்தியன் என்னப்பட்ட சீமோன்களை" கிறிஸ்துவின் சுவிசேஷத்திற் காகவும், அவர் கட்டின சபைக்காகவும் பெற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்கும் அவர் தம் சபைக்கும் இன்றைய உடனடி தேவை, யாரையோ பிரியப்படுத்துவதற்கு தண்ணீரில் முழுகி எழுந்திருப்பவர்கள் அல்ல. மாறாக, கிறிஸ்துவிலும், கிறிஸ்துவின் உபதேசத்திலும், அவர் தம் இரத்தத்தை சிந்தி வாங்கின சபையிலும் எந்த நிலையிலும் நிலைத்திருப்பதற்குத் தேவையான நெஞ்சுரம் கொண்ட விசுவாச வீரர்கள்.

ஏனெனில், முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவர்களே இரட்சிக்கப் படுவார்கள் (மத் 10:22). ஓட்டத்தை முடிப்பவர்களுக்குத் தான் நீதியின் கிரீடம் கிடைக்கும் (2தீமோ 4:8). இதற்கு நமக்குத் தேவை செலோத் தியனாகிய சீமோனின் மனப்பான்மை. இந்த மனப்பான்மையை நாம் ஒவ்வொருவரும் பெற்று, நித்திய வாழ்க்கையை அவரோடு கூட கழிக்கப் பரலோகத்தின் தேவன் நமக்கு இரக்கங்காட்டுவாராக! ஆமென்!.

**S. ராஜநாயகம்**

## "பதினொன்றாம் வேதாகம கருத்தரங்கம்"

### ஜெபிக்க வேண்டுகிறோம்.

எதிர்வரும், **அக்டோபர் 8,9–2008** (அரசு விடுமுறை நாட்கள்) ஆகிய தேதிகளில் காங்கயத்தில் நடக்க இருக்கும் "பதினொன்றாம் வேதாகம கருத்தரங்கம்" எல்லா வகையிலும் தேவனுடைய நாம மகிமைக்காய் நடந்தேறும்படி ஜெபியுங்கள்.

குடும்பமாகவும், சபையாகவும் பங்கு பெற இப்பொழுதிருந்தே திட்டமிடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

நன்றி. ஆசிரியர்.

# சுவிசேஷ அழைப்பு

இன்றைய மத உலகத்தில் ஒரு மனிதனை தேவன் (இரட்சிப்புக்கு) அழைப்பதைக் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவைகளில் சில பிரதானமானவைகளை நாம் பார்க்கலாம். முதலாவதாக, தேவன் தங்களிடத்தில் நேரடியாக மெல்லிய சத்தத்தின் மூலமாக பேசுகிறார் என்று சிலர் போதிக்கின்றனர். இரண்டாவதாக, கிறிஸ்து தங்களிடத்தில் கனவிலோ அல்லது காட்சியிலோ, தரிசனம் தருகிறார் என்று மற்றவர்கள் சொல்கின்றனர். மூன்றாவதாக, தேவன் தங்களை சில விசேஷித்த அனுபவத்தின் மூலமாக அழைக்கிறார் என்று சிலர் நம்புகின்றனர். இந்த மூன்றிலுமே, அவர்களை இரட்சிப்பதிலும் அவர்களுக்கு சில விசேஷித்த செய்தியை அளிப்பதிலும் இதுவே தேவனுடைய வழி என்று சொல்லுவர். ஆனால் வேதாகமம் இதனை போதிக்கிறதா? இங்கே ஒரு எச்சரிக்கை உள்ளது. எப்பொழுதும் காரியங் களைக் கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் இருப்பவர்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்.

முதலாவது, நாம் கண்டு கொள்ள வேண்டிய காரியம் இதுதான். இன்றைக்கு தேவன் பேசுகிறாரா? அப்படியானால், அவர் எவ்வாறு பேசுகிறார்? நாம் எபி. 1:1,2 பார்க்கும் போது, அது நமக்கு எளிதாகிறது.

எனவே இதன்படி, தேவன் இன்றைக்கு பேசுகிறார், அவர் தமது குமாரன் மூலமாக பேசுகிறார். இது மத் 17:5ல் கிறிஸ்து மறுரூபமாகும் பொழுது இவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் சொல்வதைக் கேளுங்கள்; **"இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக் கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்"**.

அடுத்த கேள்வியானது; இன்றைக்கு தேவனோ அல்லது கிறிஸ்துவோ மனிதனுடன் நேரடியாக பேசுவதுண்டோ? பின்வரும் வசனப்பகுதிகளை வாசிக்கும் பொழுது நமக்கு தெளிவுண்டாகிறது. **"இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தி னாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டி ருக்கிறது"**. (யோ. 20:30,31)

இப்பொழுது ஏன் இவைகள் எழுதப்பட்டுள்ளன? நாம் நம்பும்படி யாகத்தான். ஆனால், இவைகள் எங்கே எழுதப்பட்டுள்ளன? புதிய ஏற்பாட்டில். எனவே நாம் அதிலுள்ளவைகளை வாசித்து கற்றுக் கொண்டோ மானால் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள முடியும்.

மீண்டுமாக, நாம் வாசிக்கிறதாவது; **"ஆதலால் விசுவாசம் கேள்வி யினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்**. (ரோமர் 10:17) கேள்வி: விசுவாசம் வேறு எப்படியேனும் வருமா? அப்படியானால்,

வேதாகமம் இவ்வாறு எடுத்துரைக்காது. சிலர் இதைக் கேட்டோம் என்றும், அதை பார்த்தோம் என்றும், அனுபவத்தைப் பெற்றோம் என்றும் கூறுகின்றனர். ஆனால் தேவனுடைய வார்த்தை அப்படிப்பட்டதை நமக்கு போதிப்பதில்லை. ஆனால், விசுவாசம் தேவனுடைய வசனத்தைக் கேட்பதன் மூலம் வருமென்று நமக்கு போதிக்கிறது. எனவே, ஒரே வேதாகமமும், ஒரே விசுவாசமும் உண்டு (எபே. 4:5).

விசுவாசம் தேவனுடைய வசனத்தை கேட்பதன் மூலம் வருகிறது என்ற காரணத்தினாலேயே வசனத்தை கற்பதிலும் (2தீமோ. 2:15), வேதத்தை ஆராய்வதிலும் (யோ.5:39) உள்ள முக்கியத்துவத்தைக் குறித்து நாம் கற்பிக்கப்படுகிறோம். உண்மையில், இதனால் தான் வேதாகமத்தில் அதன் ஏவுதலைக் குறித்தும், பூரணத்துவத்தைக் குறித்தும் அதிகமாக வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது (2தீமோ. 3:16,17).

சுவிசேஷம் மண்பாண்டங்களில் வைக்கப்பட்டுள்ளது என வேதம் நமக்கு கூறுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைக் கேளுங்கள் **"நாங்கள் எங்களை பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்"**. (2கொரி. 4:5-7). அவர் இங்கே என்ன சொல்கிறார்? சுவிசேஷத்தைப் பிறருக்கு எடுத்துச் சொல்ல தேவன் பவுலைப் போன்ற தனி மனிதர்களையே தெரிந்தெடுக்கிறார் என கூறுகிறார். அப்போஸ்தலருடைய நடபடிகளில் காணப்படும் பல்வேறு மனமாற்றங்களைக் குறித்து இப்பொழுது, சிந்தியுங்கள். இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று ஒரு தனிமனிதனுக்கு தேவன் சொல்லியிருக்கிறார் என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கொடுங்கள் பார்க்கலாம். கண்டிப்பாக உங்களால் முடியாது. எடுத்துக்காட்டாக, அப். 8ம் அதிகாரத்தில், தேவதூதன் எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கிக்கும்படியாக பிலிப்புவை அனுப்பினார். கேள்வி; ஏன் அந்த தேவதூதன் பிலிப்புவை சமாரியாவிலே மக்களுக்கு தொடர்ந்து பிரசங்கிக்கும்படி விட்டு விட்டு தானே செல்லவில்லை? ஏனென்றால், தேவன் சுவிசேஷத்தை மண்பாண்டங்களில் வைத்துள்ளார். எனவே அந்த சுவிசேஷத்தின் செய்தியை எடுத்துரைப்பது மனிதனுக்குரியதாகும். மேலும் அப். 9ம் அதிகாரத்தில் சவுல் தேவனிடத்தில் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்கும் பொழுது, கர்த்தர் அவன் பட்டணத்திற்குள் செல்லும்படியாகவும் அவன் செய்ய வேண்டியது அங்கே சொல்லப்படும் எனவும் கூறினார். பின்பு அனனியா வந்து இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றிக் கூறினான் (அப். 22:161. கேள்வி; ஏன் கர்த்தர் அவனிடமே கூறவில்லை? ஏனென்றால் அப்படி செய்வது தேவசித்தமல்ல. அப்போஸ்தலருடைய

நடபடிகளில் காணப்படும் மற்ற மனமாற்றங்களும் இவ்வாறு தான் அமைந்துள்ளன. வேதாகமத்தைத் தவிர கர்த்தர் மக்களிடம் இன்றைக்கு நேரடியாக பேசுவதில்லை என்பதற்கும், இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூறுவதற்கும் கர்த்தர் பிரத்யேகமாக தோன்றுவ தில்லை என்பதற்கும் இதுவே காரணம்.

கர்த்தர் இங்கே இருந்தாலும் அவர், ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்பதை கூறுவதில்லை (அப். 9), அப்படி செய்வாரானால் அது ஏற்கனவே பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷமாயிராமல் வேறொன்றாக இருக்காது. (கலா. 1:6-9) எனவே, ஏற்கெனவே மனிதன் செய்ய வேண்டியது என கட்டளை யிட்டவைகளை செய்வதற்காக அவரே வருவாரானால் அதில் எந்த நோக்கமுமிருக்காது. (மாற்கு.16:15,16) மனிதனால் செய்ய முடிந்த வைகளை கர்த்தர் மனிதனுக்காக செய்ய மாட்டார் எனவும் கூறலாம்.

சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் பிரசங்கியாரின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் காரணம் என்னவெனில் சுவிசேஷம் மண்பாண்டங்களில் வைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்து கூறினதாவது, **"பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்"**. (மாற்கு 16:15;16) மேலும் நாம் வாசிக்கிற தாவது, **"ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாத வர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷ மாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே"** (ரோ.10:13-15) பின்பு இறுதியாக, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி. கடிந்து கொண்டு, புத்தி சொல்லு. (2தீமோ. 4:2). இந்த முறையை கர்த்தர் தமது சித்தத்தை வெளிப்படுத்து வதற்கென தெரிந்து கொண்டுள்ளார் என்பதை நீங்கள் காணலாம். இது மிகவும் எளிமையானதாகும்.

அது உண்மையாயிருக்கிற நிலையில், பவுல் தன்னுடைய தெசலோனிக்கே சகோதரருக்கு எழுதுகிறதாவது; **"நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத் தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்"** (2தெச.2:14). தெசலோனியர்களை கர்த்தர் சுவிசேஷத்தின் மூலமாக அழைத்தார் என்று பவுல் கூறுகிறார். அதாவது பவுல் அவர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்தார், அவர்கள் அதைக் கேட்டு, கீழ்ப்படிந்தனர்,

இவ்வாறாக அவர்கள் கிறிஸ்துவிடம் அழைக்கப்பட்டனர். இன்னொறு விதமாக கூற வேண்டு மானால் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதன் மூலம் கிறிஸ்து அவர்களை இரட்சிப் புக்கு அழைத்தார் எனவும் கூறலாம்.

இன்றைக்கு எப்படி? நாம் எப்படி அழைக்கப்பட்டோம்? கிறிஸ்தவர்களாகிய நாமும் அதே சுவிசேஷத்தின் மூலமாக அதே விதமாகத்தான் அழைக்கப்பட்டுள்ளோம். அதாவது, சுவிசேஷம் நமக்கு பிரசங்கிக்கப்பட்டது நாம் அதை கேட்டு, விசுவாசித்து, கீழ்ப்படிந்தோம். கர்த்தர் நம்மை இரட்சித்தார். நாம் பிறருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் பொழுது, மீண்டும் மீண்டுமாக அது நிகழ்கிறது. கர்த்தர் ஒரு நபரை ஒரு விதமாகவும் மற்றொரு நபரை வேறு விதமாகவும் அழைப்பதில்லை. ஆனால், அவர் அனைவரையும் ஒரே சுவிசேஷத்தின் மூலமாகவும் அழைக்கிறார்.

ஆம், தேவன் இன்று பேசுகிறார், கிறிஸ்துவின் மூலமாக பேசுகிறார். கிறிஸ்து பேசுகிறார் ஆனால் அவர் வசனத்தின் மூலமாக பேசுகிறார். கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிற யாவருக்கும் சுவிசேஷத்தை பிறருக்கு பிரசங்கிப்பதும் போதிப்பதும் கடமையாயிருக்கிறது. இவ்விதமாக, கர்த்தர் சுவிசேஷ பிரசங்கியார் அல்லது போதகர் மூலமாக தமது சித்தத்தை வெளிப்படுத்தவும், இழந்து போனவர்களை தம்மிடத்தில் அழைத்துக் கொள்ளவும், கிரியை செய்கிறார் (மத். 11:28-30).

சுவிசேஷத்தை பிரசங்கிப்பது நமது முதல் கடமையாயிருக்கிறது. கர்த்தருக்குக் கீழ்ப்படிய மனதுள்ளவர்களை வழிநடத்துவது நமது இரண்டாவது கடமையாயிருக்கிறது (மத். 28:19,20). எனவே பவுல் இவ்வாறு கூறினார்; **''ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவேஅனுப்பினார். சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது''. (1கொரி. 1:17,18).**

ஆதலால் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி மாத்திரம் தான் அனுப்பப்படவில்லை என்கிறார். சுவிசேஷத்தை பிரசங்கிப்பதே அவருடைய முதல் கடமையாயிருந்தது அதற்கு பின்பாக கர்த்தருக்கு கீழ்ப்படிய மனமுள்ளவர்களுக்கு அவர் ஞானஸ்நானம் கொடுக்க ஆயத்தமாயிருந்தார்.

நீங்கள் இதற்கு முன் சுவிசேஷத்தைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லையானால், இப்பொழுது நீங்கள் சுவிசேஷ அழைப்பைப் பெறுகிறீர்கள் - அது கிறிஸ்துவைக்கிட்டி சேரும்படியான அழைப்பு. அவருக்குக் கீழ்ப்படியுங்கள், அவர் உங்களை இரட்சிப்பார்.

**J.C. Choate** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# முழுமையான கிறிஸ்தவப் பெண்

முழுமையான கிறிஸ்தவப் பெண் என்றால் என்ன? இதற்கு ஒரே வரியில் பதில் கூற இயலாது. ஆனால், தேவன் சில தகுதியம்சங்களை கொடுத்து முழுமையடையச் செய்கிறார். இதைப் பெற்றுக்கொள்ளவும், தேவனுடைய வழிநடத்துதலையும் தெரிந்து கொள்ள பூமிக்கடுத்த காரியங்களை ஆராய்ந்து கொண்டிருக்க அவசியமில்லை நம் தேவைகளை தேவன் அறிந்திருக்கிறார், போதுமான அறிவுரைகள் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவரை வழிகாட்டியாக வைத்துக் கொண்டு எதற்குமே கவலைப் படாமல், சொன்னதை செய்து கொண்டிருப்போம்.

முழுமையான கிறிஸ்தவப் பெண்ணாகத் திகழ்வதற்கு தேவன் கொடுத்துள்ள மூன்று வசனப்பகுதிகளை பார்ப்போம்.

1. கலா 5:22-24,
2. கொலோசெயர் 3:12-14
3. 2பேதுரு 1:5-9

இப்பகுதிகளை கவனமாக படிக்கும் பொழுது நாம் அவைகளைப் பற்றி புரிந்த கொள்ளலாம். சில குணாதிசயங்களைப் பற்றி இம்மாதம் கற்றுக் கொள்வோம்.

## முழுமையான வாழ்வுக்கு அஸ்திபாரம் விசுவாசம்

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி. 11:6). கிறிஸ்தவ வாழ்வுக்கு விசுவாசம் தான் அஸ்திபாரக் கல். விசுவாசம் எப்படி வரும்? விசுவாசம் கேள்வியினாலே வரும். (ரோமர் 10:17) இயேசு தேவனுடைய குமாரன், அவர் இந்த பூமிக்கு வந்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், உயிரோடு எழுந்தார். இவைகளை நாம் விசுவாசியாவிட்டால் நாம் கிறிஸ்தவர்களாகவே இருக்க முடியாது. விசுவாசம் என்ற ஒன்று இல்லாமல் பிற நல்ல குணங்களை ஒருவன் பெற்றுக் கொள்ள முடியாது.

## முழுமையான வாழ்வுக்கு தனித்துவம் வாய்ந்த ஓர் பண்பு அன்பு

அன்பால் சாரமேற்றப்படாமல் எத்தனை நல்ல குணங்களை நாம் பெற்றிருந்தாலும் அவைகள் அனைத்தும் வீண். ஒரு கிறிஸ்தவனை இந்த உலகில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது இந்த அன்பு தான். 1கொரி 13ம் அதிகாரம் அன்பின் அதிகாரம் விசுவாசம் விலையேறப்பெற்றது, அவசியமானது. நம்பிக்கை ஆதரிக்கிறது மிகவும் தேவையானது. ஆனால், அன்பு நிலை நிற்கக் கூடியது. அது தேவ பண்பு. வானத்திற்கு கீழே பூமியில் தேவன் மனுக்குலத்துக்கு மட்டுமே கொடுத்த மாபெரும் ஈவு அன்பு. பிரியமான

வர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம். ஏனெனில், அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான் (1யோ 4:7). அன்பு தேவனுக்குக் கீழ்ப்படியச் செய்கிறது (1யோ. 5:3). தேவன் நம்மேல் வைத்த அன்பினிமித்தம் தான் தன் ஒரே பேறான குமாரனை கொடுத்தார் (யோ 3:16) பெண்களாகிய நாம் நம் வார்த்தைகளில், செயல்களில், எல்லா நேரத்திலும் மெதுவாயும், மென்மையாகவும் நடக்க அன்பு மிகவும் தேவைப்படுகிறது. "பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பு" என்று கொலோ 3:14ல் வாசிக்கிறோம். தேவனின் பார்வையில் பூரணமாக நாம் திகழ வேண்டுமானால் அன்பு தலையான பண்பாக இருக்க வேண்டும்.

## கிறிஸ்தவப் பெண்கள் கொள்ள வேண்டாதது கவலை

ஞானஸ்நானம் எப்படி கட்டளையாகக் கொடுக்கப்பட்டுள்ளதோ அதைப் போன்றுதான் கவலைபடக்கூடாது என்பதும் ஒரு கட்டளை. நீங்கள் ஒன்றிற்கும் கவலைப்படாமல்..... (பிலி 4,6,7) என்றால் எதற்குமே கவலைப் படக் கூடாது என்று அர்த்தம். கவலைப்படுவதினால் எதையுமே சாதிக்க முடியாது. பிரச்சனைகளை தேவன் கையில் ஒப்புக் கொடுப்போம். **உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும் (நீதி. 16:3). அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள் (1பேதுரு 5:7). கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் (சங். 55:22)** நம்முடைய பாரங்களை சுமக்க தேவன் தயாராக இருக்கிறார். அவரிடத்தில் கொடுத்து விடுவோம். அவரிடத்திலே சுலபமாக கொடுப்பதை விட்டுவிட்டு தேவையில்லாமல் நாமே சுமந்து கொண்டு பாரபட்டுக் கொண்டிருக்கிறோம்! **உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே** (எபி. 13:5) அவர் நமக்கு உதவி செய்வது எவ்வளவு ஆறுதலான விஷயம்.

## முழுமையான கிறிஸ்தவப் பெண் பெற்றிருக்க வேண்டியது பொறுமை

இன்றைக்கு நமக்கு வேண்டிய பண்புகளில் நாம் பெற்றிராதது இந்த பொறுமை. நம் கணவர், பிள்ளைகள், அயலகத்தார், சக கிறிஸ்தவர்கள், ஏன் இந்த உலகத்தோடு கூட நாம் பொறுமையற்றவர்களாகத் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஏன் என்றால் எல்லாவற்றிலும் அவசரம், அவசரம் எதையுமே நிதானமாக, மெதுவாக செய்ய மனமில்லாத ஓர் நிலை. ஜெட் வேகத்தில் காரியங்கள் நடைபெற வேண்டும் என்று துடிக்கிறோம். வேதம் சொல்லுகிறது, **உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள் (லூக்கா 21:19) தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் (ரோ 15:4) உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்** (யாக். 1:3) 4ம் வசனத்தில் நிறைவையும், பூரணத்தையும் பெற்று குறைவில்லாதவர்களாயுமிருக்க ஒருவனுக்கு **பொறுமை** அவசியம் என்று யாக்கோபு ஆசிரியர் கூறுகிறார். ஆவிக்குரிய

முதிர்ச்சியைப் பெற்றுக்கொள்ள நமக்கு நாமே பொறுமை என்ற குணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சோதனையான நேரத்திலே "சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கும்" என்று எண்ணி பொறுமையோடு சகிக்க பழகிக் கொள்ள வேண்டும்.

இன்னும் அநேக பண்புகளை கூறிக் கொண்டே போகலாம். **சாந்தம், அமைதி** போன்ற குணங்கள் இன்றைக்கு மிகவும் தேவையாக உள்ளது. நீதி 31ம் அதிகாரத்தில் உள்ள குணசாலியான ஸ்திரீயின் பண்புகளை அடிக்கடி வாசித்து அவைகளை நாமும் வளர்த்துக் கொள்வோம். சாந்த குணம் இருக்கும் போது மற்றவர்களின் தேவைகளைப் பார்க்கவும், உதவி செய்யவும் அது வழிவகுக்கிறது. நாம் சாந்தமுள்ள கண்களைப் பெற்றிருக்க வேண்டும். அப்போது தான் அதன் வழியாக பிறரைப் பார்த்து அவர்களை புரிந்து கொள்ள முடியும்.

ஆக, அருமையான சகோதரிகளே, இப்படிப்பட்ட பண்புகளை பெற்றுக் கொண்டால் முழுமையான கிறிஸ்தவப் பெண்களாக நாம் திகழ முடியும். அதற்கு பரலோகத்தின் தேவன் உதவி செய்வாராக!

**ரேச்சல் ராஜநாயகம்**

## நாளும் நடப்பும்

1. தமிழக அமைச்சரவையில் இடம் பெற வேண்டுமென்று காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் வலியுறுத்தல்.
2. தூத்துக்குடி அருகே டைட்டானியம் ஆலை அமைக்க மக்கள் ஆதரவு.
3. தஞ்சை தமிழ்பல்கலைகழகத்திற்கு கருணாநிதி பெயர் வைக்க வேண்டு மென்ற கோரிக்கை எழுந்துள்ளது.
4. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து பாதிப்புக்குள்ளா கின்றனர்.
5. ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் நிறைவேறியே தீருமென்று பொதுப் பணித் துறை அமைச்சர் கூறியுள்ளார்.
6. தமிழகத்தில் செப்டம்பர் மாதம் உள்ளாட்சி இடைத்தேர்தல் நடக்குமென்று மாநில தேர்தல் ஆணையர் கூறுகின்றார்.
7. அதிபர் பதவியிலிருந்து முஷாரப்பை நீக்க பாகிஸ்தான் கட்சிகள் தீவிரம்.
8. 29வது ஒலிம்பிக் போட்டி பெய்ஜிங் நகரில் கோலாகலமாக துவங்கியது.
9. இந்திய வீரர் அபிநவ் பிந்த்ரா துப்பாக்கி சுடுதலில் தங்கம் வென்று இந்திய விளையாட்டு வரலாற்றில் முத்திரை பதித்துள்ளார்.

வாலிபர் பகுதி

# வேதத்தின் மகத்துவம்

**வா**லிப நெஞ்சங்களே! உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். பிரியமானவர்களே, உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் புஸ்தகம் நம்முடைய பரிசுத்த வேதாகமம் தான். அநேக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதும் நம் பரிசுத்த வேதாகமம் தான் அப்படியிருந்தும் வாலிபர்கள் இன்றைய நாட்களில் வேத வசனங்களை வாசிப்பதில் அதிகமாக அக்கறை செலுத்து வதில்லை. அப்படியே வாசித்தாலும் மேல் வாரியாக வாசித்து விடுகின்றனர் அதைத் தியானிப்பதில்லை, அதில் புதைந்து கிடக்கின்ற பொக்கிஷங்களை தோண்டி எடுப்பதில்லை. சங்கீதக்காரன் சொல்லும் போது "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும், பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்று சொல்கிறார் (சங்கீதம் 1:2). அநேகர் வேதத்தை தியானித்து படிக்காமலிருப்பதற்கு காரணம் வேதத்தை நம்பாமலிருப்பது தான். சரி, வேதாகமத்தை நாம் ஏன் நம்புகிறோம்? ஏனென்றால், வேதாகமத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள ஒற்றுமை நம்மை நம்பத்தூண்டுகிறது. வேதாகமம் ஒரு அறிவியல் புஸ்தகம் அல்ல. ஆனால், அது ஒரு விஞ்ஞானப் பூர்வமான தகவல்களைத் தெரிவிக்கும் போது மிகத்துல்லியமாக இருக்கிறது. இது ஒரு புவியியல் புஸ்தகமும் அல்ல. ஆனால், பூகோளத்தைப் பற்றி மிகத் துல்லியமாக தகவல்களைத் தருகிறது. வேதாகமம் ஒரு வரலாற்றுத் தகவலை தெரிவிக்கும் போது எப்போதும் அது சரியாக இருக்கிறது. சரி, இப்போது மனிதன் கண்டுபிடிப்பதற்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே வேதாகமம் வெளிப்படுத்தியிருக்கிற சில விஞ்ஞானப் பூர்வமான தகவல்களை கவனிப்போம்.

## I <u>இரத்தம்</u>

அப்போஸ்தலனாகிய பவுல் மார்ஸ் மேடை பிரசங்கத்தின் போது, தேவனுடைய மகத்துவத்தையும், வல்லமையையும் விவரித்தார், அப்போது அவர் சொல்லும் போது "மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைக ளையும் குறித்திருக்கிறார்" என்று பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு சொன்னார். இதில் அடங்கியிருக்கிற உண்மையென்ன வென்றால் தேவன் மனித இனத்தை ஒரே இரத்தத்தினாலே தோன்ற பண்ணியிருக்கிறார் அல்லது படைத்திருக்கிறார். நமக்கு குரங்குகள் உட்பட மற்ற மிருகங்களைக் காட்டிலும் வித்தியாசமான இரத்தம் இருக்கிறது. நம்முடைய இரத்தம் மிருகங்களின் இரத்தத்தைப் போல் இல்லாதபடியால் நாம் மிருகங்களிடமிருந்து வரவில்லை. எனவே, பரிணாமக் கொள்கைக்காரர்கள் நம்புவது, சொல்வது தவறாகும்.

நம்முடைய இரத்தம் மிருகங்களின் இரத்தத்திலிருந்து வேறுபடுவது மாத்திரமல்ல, நமக்கு வித்தியாசமான மாம்சமும் இருக்கிறது. "எல்லா மாம்சமும் ஒரே விதமான மாம்சமல்ல; மனுஷனுடைய மாம்சம் வேறே,

மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே", (1கொரிந்தியர் 15:39). எனவே நாம் மிருகங்களிடமிருந்து தோன்றவில்லை. ஆனால் நாமும், மிருகங்களும் ஜீவனுள்ள தேவனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் (ஆதியாகமம் 1:24-27). நவீன தொழில்நுட்பத்தால் இரத்தத்தைப் பற்றி அதிகமாக விஞ்ஞானிகள் கற்றுக் கொண்டு வருகிறார்கள். ஆனால், மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் தேவன் ஒரே இரத்தத்தினாலே சிருஷ்டித்திருக்கிறார் என்பதை அவர்கள் தொடர்ந்து உறுதி செய்வார்கள். இது வேதாகமத்தின் மீது நாம் நம்பிக்கை வைக்கத் தூண்டுகிறது. சரி, மனித இனத்தை தேவன் ஒரே இரத்தத்தினால் சிருஷ்டித்தார் என்பது பவுலுக்கு எப்படித் தெரியும்? ஏனென்றால், இந்த விஞ்ஞானப் பூர்வமான உண்மையை பல நூற்றாண்டு களுக்குப் பிறகு தான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். பவுல் ஒரு மருத்துவரோ அல்லது விஞ்ஞானியோ அல்ல. ஆனால், அவர் ஒரு கூடாரம் கட்டுகிறவர். இந்த உண்மையை உதிர்க்க மனித ஞானத்தை விட மேலான ஞானம் அவருக்கு இருந்திருக்க வேண்டும். இது அவர் 1 கொரிந்தியர் 2:13ல் அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரிய வைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம், என்று சொல்லியிருப்பதன் நம்பகத்தன்மையை அதிகரிக்கிறது.

## II கிருமிகள்

லேவியராகமம் 13,14 அதிகாரங்களில் ஆசாரியனால் எப்படி குஷ்டரோகம் கண்டுபிடிக்கப்படுகிறது, குஷ்டரோகம் வந்தால் அதற்கு என்ன செய்ய வேண்டும்? என்பது பற்றிய விளக்கங்களை மோசே கொடுத் திருக்கிறார். குஷ்டரோகம் பிடித்தவன் தனியே குடியிருக்க வேண்டும் என்று மோசேயால் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றும் கூட வியாதியுள்ளவர்கள் மற்றவர்களிடம் தொடர்பு கொண்டால் அவர்களுக்கும் வியாதி பிடித்து விடும் என்பதற்காக மருத்துவமனைகளில் தனியாக வைக்கப்படுகிறார்கள். சிலவகையான தொற்று நோய் பிடித்தவர்களை இப்படி தனியாக வைக்கிறார்கள் ஏனென்றால் கிருமிகள் மூலமாக தொற்றுநோய் பரவுகிறது என்பதை நவீன தொழில்நுட்பங்கள் மூலமாக நாம் கற்றுக் கொண்டி ருக்கிறோம். ஆனால், பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு எழுதியுள்ள காரியங்கள் நவீன விஞ்ஞானத்தோடு ஒத்துப் போகிறது. ஒன்றுபட்டிருக்கிறது.

## III பூமியின் அமைப்பு

"அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்; அதின் குடிகள் வெட்டுக்கிளிகளைப் போல இருக்கிறார்கள்; அவர் வானங்களை மெல்லிய திரையாகப்பரப்பி அவைகளைக் குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரிக்கிறார்" (ஏசாயா 40:22) கிறிஸ்துவுக்கு முன்பு சுமார் எண்ணூறு வருடங்களுக்கு முன்பு ஏசாயா பூமி உருண்டை என்று எழுதினார். ஆனால் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு மக்கள் பூமி தட்டை என்று நினைத்தார்கள். மேலும் வேதாகமம் பூமியின் நான்கு மூலைகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது இது பூமியின் நான்கு திசைகளைக் குறிக்கிறது. பூமி உருண்டை என்று பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு ஏசாயாவுக்கு எப்படித் தெரியும்? தேவனுடைய வெளிப்படுத்தலினால் தான் ஏசாயாவால் அவருடைய

நாட்களில் இப்படி எழுத முடிந்தது. இந்த விஞ்ஞானப் பூர்வமான உண்மை வேதாகமத்தின் மீது நம்முடைய நம்பகத்தன்மையை அதிகரிக்கிறது. தேவன் மீது விசுவாசத்தையும் அதிகரிக்கிறது.

## IV பூமி அந்தரத்திலே தொங்குகிறது

"அவர் உத்தரமண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்" (யோபு. 26:7). சமீப காலங்களில் தான் நாம் புவிஈர்ப்பு சக்தியைப் பற்றி தெரிந்து கொண்டோம். விண்வெளியில் புவிஈர்ப்பு சக்தி கிடையாது. முற்காலங்களில் சிலர் கிரேக்க கடவுளான அட்லஸின் தோள்களில் பூமி இருந்தது என்று நம்பினார்கள். சில இடங்களில் இன்னும் பூமியானது ஒரு இராட்சத கடல் ஆமையின் மேல் இருக்கிறது என்ற மூட நம்பிக்கை நிலவுகிறது. ஆனால், இப்போது புவிஈர்ப்பு விதி ஈடுபடுத்தப் படுகிறது. பூமி அந்தரத்திலே தொங்குகிறது என்பதை நாம் அறிவோம். நமக்குத் தெரியும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளால், ஆனால் யோபுவுக்கு எப்படித் தெரியும்? அநேகமாக யோபு புஸ்தகம் தான் வேதாகமத்தின் பழைய புஸ்தகமாக இருக்க வேண்டும். அப்படியென்றால் யோபுவுக்கு எப்படித் தெரியும்? தேவன் யோபுவுக்கு வெளிப்படுத்தினார். யோபு அதையே எழுதினார். இந்த விஞ்ஞானப் பூர்வமான உண்மையை வேதாகமத்தின் மீது நம்முடைய நம்பகத்தன்மையை அதிகரிக்கிறது.

## V கடல்வழிப் பாதைகள்

கடல்வழிப்பாதையைக் கண்டுபிடித்த "மேத்யு பான்டேய்ன் முரே" என்பவர் ஒரு முறை தன்னுடைய மகன் சங்கீதம் எட்டாம் அதிகாரத்தை வாசிப்பதை கவனித்துக் கொண்டிருந்தார். குறிப்பாக எட்டாம் அதிகாரத்தின் எட்டாம் வசனத்தை கூர்ந்து கவனித்தார். அந்த வசனம் இப்படியாகச் சொல்கிறது. "தேவன் ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங் களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் மனிதனுடைய பாதங் களுக்குக் கீழ்ப்படுத்தினார்". தேவன் கடலுக்குள் பாதை இருக்கிறது என்று சொன்னால் நிச்சயமாக பாதை இருக்கும். அதை நான் கண்டுபிடிப்பேன் என்று சொல்லி கடல் வழிப்பாதையை மேத்யு பான்டேய்ன் முரே கண்டுபிடித்து மாலுமிகளின் படத்தை வரைந்துக் கொடுத்தார். அதைத்தான் இன்றைய நாட்களில் கடல் வழிப் போக்குவரத்திற்கு பயன்படுத்துகிறார்கள்.

கடல்களில் பாதைகள் இருப்பது தாவீதுக்கு எப்படித் தெரியும்? அவர் மாலுமி அல்ல, அவர் ஒரு மேய்ப்பன் ஆயினும் அவர் கொடுத்த விஞ்ஞானப் பூர்வமான உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு மனிதனுக்குப் பல நூற்றாண்டு கள் பிடித்தது. தாவீது பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினார் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:16). மனிதன் கண்டுபிடிப்பதற்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வேதாகமம் வெளிப்படுத்தியிருக்கிற விஞ்ஞானப் பூர்வமான தகவல்கள் இன்னும் அநேகம் இருக்கிறது. கர்த்தருக்குச் சித்தமானால் வருகின்ற மாதங்களில் அதை நாம் பார்ப்போம். இப்படி விஞ்ஞானத்தைப் பற்றியும், புவியியலைப் பற்றியும், வரலாற்றைப் பற்றியும் துல்லியமாக பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வெளிப்படுத்தி யிருக்கிற வேதப் புஸ்தகத்தை நாம் தியானித்துப் படிப்போம் தேவ ஆசீர்வாதம் பெறுவோம்! கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!.

*பென்னி மார்ட்டின்*

சிறுவர் பகுதி

# "பையன்கள், கரடிகள் மொட்டைத்தலை"



பழைய ஏற்பாட்டிலே, இரண்டு கரடிகளைப் பற்றிய ஒரு சம்பவம் இடம் பெற்றுள்ளது. தேவனுடைய தீர்க்கதரிசிகளில் ஒருவரான, **எலிசா** என்னும் பெயரையுடைய தீர்க்கதரிசி, **பெத்தேல்** என்னும் பட்டணத்திற்கு பயணப்பட்டு போனான். அவன் வழி நடந்து போகையில் பிள்ளைகள் பட்டணத்திலிருந்து வந்து அவனைப் பார்த்து; மொட்டைத் தலையா ஏறிப்போ, மொட்டைத் தலையா ஏறிப்போ என்று பரியாசம் பண்ணினார்கள். அப்பொழுது எலிசா தீர்க்கதரிசி திரும்பி அவர்களைப் பார்த்து, கர்த்தரின் நாமத்தினாலே அவர்களை சபித்தான். உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து, அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளைப் பீறிப்போட்டது (2இராஜா 2:23,24).

இந்த சம்பவத்திலே காணப்படும் வியத்தகு காரியத்தின் அர்த்தம் என்ன?

**முதலாவது**, தேவன் தன்னுடைய சித்தத்தை மனுக் குலத்துக்கு வெளிப்படுத்த பயன்படுத்திய மக்கள் தான் **தீர்க்கதரிசிகள்**. (யாத். 7:1, உபாகமம் 18:18,19). ஆகையால், யாராயிருந்தாலும் ஒரு தீர்க்கதரிசியை மரியாதைக் குறைவாக எண்ணினால், அது தேவனை மரியாதைக் குறைவாக எண்ணுவதற்கு சமம்.

**இரண்டாவது**, இந்த பிள்ளைகள், சின்னக் குழந்தைகள் அல்ல, ஆனால் இளம் வாலிபர்கள். வாலிபர்கள் என்ற வார்த்தை, வேதாகமத்தில் எபிரெய மொழியிலே பிறந்த குழந்தை முதல் வாலிபப் பிராயம் வரை உள்ளவர்களைக் குறிக்கும் சொல்லாக இருக்கிறது.

**மூன்றாவதாக**, இந்த இளைஞர்கள் எலிசா தீர்க்கதரிசியை பரியாசம் செய்த முறை நல்ல ஒரு காரியமாக இருக்கவில்லை. மாறாக சாபத்தை குறிக்கும் வார்த்தைகளாக இருந்தன. பழைய ஏற்பாட்டிலே தேவன் துன்மார்க்கரை சபிக்கும்படியாக வெளிப்புறமாக தெரிகிற பாவத்தை குறிப்பதற்கு மொட்டைத் தலை என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். உதாரணமாக (ஏசாயா 3:24). இந்த சாபமானது ஏதோ

ஆணையிட்டு சொல்லக் கூடிய வார்த்தையாக இராமல், கலகம் செய்யும் மக்களை நியாயந் தீர்க்க கூடிய ஒன்றாக இருக்கிறது. (உபா 27:14-16). ஆகையால், இந்த இளம் பையன்கள் "நாங்கள் உன்னை சபிக்கிறோம், நீ பாவியானவன் என்று" எலிசாவிடம் கூறியுள்ளனர். தேவனுடைய மனிதனை இந்த விதமாக நடத்துவது கவலைக்குரிய காரியமாகும் (2நாளா 36:16).

**நான்காவதாக,** IIஇராஜா 2:9-11ல் உள்ளபடி எலியா தீர்க்க தரிசி தேவனால் அனுப்பப்பட்ட அக்கினி இரதத்திலே ஏறிப்போய் கொஞ்ச நேரமே ஆன நிலையில் எலிசாவையும் இந்த பூமியை விட்டு ஏறிப்போகும்படியாக ஏறிப்போ, ஏறிப்போ என்று துரத்தாத குறை யாய் இந்த இளம் சிறார்கள் கத்தி யுள்ளனர்.

**ஐந்தாவதாக,** எலிசா தீர்க்க தரிசி இவர்களை பழி வாங்கும் முயற்சியில் ஈடுபடாமல், கர்த்தரின் நாமத்தினாலே அவர்களை நியாயந் தீர்த்தான். அதன் பொருள் என்ன வென்றால், தேவனின் அதிகாரத் தினால் அந்தக் காரியம் நடைபெற வேண்டும் என்பது.

**ஆறாவதாக,** கீழ்ப்படிதலைப் பற்றியும், மரியாதையைப் பற்றியும் இவர்களுக்கு கற்றுத்தர கரடிகளை அனுப்பியது எலிசா அல்ல, தேவன் தான் அதை செய்தார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அனைத்து விலங்கினத்தின் மேல் சகல அதிகாரமும் உடையவர் தேவன் ஒருவரே. அவரே கொள்ளி வாய் சர்ப்பங்களை அனுப்பி இஸ்ர வேலரை கடிக்கும்படி செய்தார் (எண். 21:6). கீழ்ப்படியாத ஓர் இளம் தீர்க்கதரிசியை கொல்ல தேவன் ஒரு சிங்கத்தை அனுப்பினார் (1இராஜா 13:24). யோனாவை விழுங்கும் படியாக ஒரு பெரிய மீனை தேவன் ஆயத்தம் செய்திருந்தார் (யோனா 1:17) தானியேலை பாதுகாக்கும் படியாக சிங்கத்தின் வாயைக் கட்டிப் போட்டார் (தானி. 6:22).

அன்பார்ந்த சிறுவர்களே, இந்த சம்பவத்திலிருந்து நாம் ஒரு பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டும். மக்களை மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும். தேவனால் அதிகாரத் திலே வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் (எபேசி 6:1-3; ரோமர் 13:1-4). நாம் இவ்வாறு செய்யும் பொழுது தேவன் மேல் நாம் வைத்திருக்கும் அன்பை காட்டு கிறவர்களாயிருப்போம். அப்படிச் செய்ய இன்றே தீர் மானியுங்கள். மீண்டும் அடுத்த மாதம் சந்திப் போமா. தேவன் நம்மோடிருப் பாராக!

<u>மனப்பாட வசனம்</u> : **"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள் ளுங்கள்"** (யோவான் 14:15).

**R.A.R. நாயகம்**

# சாத்தானுடைய தந்திரங்கள் நமக்கு தெரிந்திருக்கிறதா?

அன்புத் திருமறை ஆசான் வாசகர்களுக்கு நமதாண்டவர் இயேசுவின் நாமத்தில் மகிழ்ச்சியான வாழ்த்துக்கள். உலகத் தோற்றத்துக்கு முன்பே நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். விசேஷமானவர்கள், தேவ சாயலில் உருவாக்கப்பட்டவர்கள். ஆரம்பத்தில் இழந்து போனதை மறுபடியும் பெற்றுக் கொள்ளவும் தேவ குமாரனுடைய சாயலில் வளரவும் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள். ஆதியிலே மனுஷனை வஞ்சித்த பிசாசு இன்று சபையிலிருக்கும் விசுவாசிகளாகிய நம்மை வஞ்சித்துக் கொண்டே தான் இருக்கின்றான். சிலர் அவற்றில் விழுந்து கொண்டே இருக்கிறார்கள். அருமையான சபை விசுவாசிகளாய் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஏதோ பிரயோஜனமற்ற வாழ்க்கை நடத்துவது போலவும் தேவனுக்கு விரோதமான உலகப் பொருளைத் தேடி அலையும் இவ்வுலக அவிசுவாசிகளின் வாழ்க்கையே மேலானது போலவும், பிரயோஜனமானதைப் போலவும் காண்பிக்கிறது பிசாசின் மிகப்பெரிய தந்திரங்களில் ஒன்றாகும்.

பொருளாதார விஷயத்தில் மிக உயரத்திலிருப்பவர்கள் தங்கள் பிள்ளைகள் சம்பாதிக்க வேண்டும் என்ற காரணத்தினால், சபை கூடுதலை அசட்டை செய்கிறதை காண்கிறோம். பணம் சம்பாதிக்க சபை கூடுதலை விட்டு விட்டால் அவர்களுடைய ஆன்மீக வாழ்வு அடிபட்டு பிசாசு ஜெயித்தவனாகிறான். இவ்வுலக வாழ்வு இன்பங்கள் நிறைந்து ஜாலியானது போலக் காணப்பட்டாலும் உண்மையில் அது அசுத்தங்கள் நிறைந்து உண்மை "மனச் சமாதானமற்றுதுதான்" இருக்கிறது. அடுத்து கவலைகள் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கும் சக்தியுடையதாயிருக்கிறது (2கொரி 7:10) உண்மையில் கவலையை மறக்க மனிதன் எடுக்கும் எந்த முயற்சியும் அவனுக்கு பலனை அளிப்பதில்லை என்பதே சத்தியமாயிருக்கிறது..ஆனால் பிசாசு இவ்வுலக மனிதர்களை மது, விபசாரம், புகைப்பிடித்தல், போதை வஸ்துக்கள் என அநேக வழிகளில் கவலையை மறக்கலாம் என்ற பொய்யான ஆலோசனையை கொடுத்து மனிதனை தேவனை விட்டுப் பிரிப்பதும் பிசாசின் தந்திரமாகும். தேவனை அறியாமல் வாழும் உலக வாழ்வு அக்கிரமங்கள் நிறைந்தது, அதனால் தான் ஆரம்பத்தில் நோவா காலத்தில் வெள்ளத்தால் உலகத்தை அழித்து தேவன் ஓர் எச்சரிப்பை உண்டாக்கினார். ஆனால், மனிதர்கள் அதின் ஆபத்தை உணராமல் "வானவில்"லின் அழகை மாத்திரம் ரசித்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசுவின் அற்புதங்கள் வேதத்தில் எழுதப்பட்டிருப்பதின் காரணம் என்ன? யோவான் 20:30,31ன் படி இயேசு "தேவனுடையக் குமாரன்" என்று படிக்கிறவர்கள் முடிவுக்கு வர வேண்டும். ஆனால் இன்றைக்கு கிறிஸ்துவின்

சபையாரைத் தவிர வேறு எவரிடமும் இத்தகையத் தெளிவு இருப்பதாக தெரியவில்லை. காரணம் ஒவ்வொரு மதத்திற்கும் வெவ்வேறு கடவுள்கள் இருப்பதாக சொல்வது போல கிறிஸ்தவர்களின் கடவுள் இயேசு என்ற மேலோட்டமான தேவனுடைய வார்த்தைகளை உணராதவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் வேதம் தெளிவாக இயேசு நாம் வணங்க வேண்டிய "கடவுளின் மகன்" என்று வெளிப்படுத்துகிறது. தேவனுக்கு செலுத்த வேண்டிய மகிமை இயேசுவின் நாமத்தில் செலுத்தப்பட வேண்டும் (எபேசி 5:20, கொலே 3:17, எபி 13:15) பிசாசு ஆரம்பம் முதலே தேவனுக்கு விரோதமாக செயல்படுகின்றான். இன்றைக்கும் நாம் சபைக்கூடி வரும் போது தேவனைத் தான் தொழுது கொள்ள இயேசு அழைக்கின்றார் யோவா 4:24 பிசாசு தடை செய்கின்றான் என்பதை அறிந்து கொள்வோமாக.

பிதாவாகிய தேவனிடம் நம்மைச் சேர்க்கும் பிரதான ஆசாரியராக நம்முடைய ஆண்டவர் இயேசு இருப்பதை அறியாமல் இவ்வுலகம் அவரை வெறும் வியாதியை குணப்படுத்துகிறவராக, அற்புதங்கள் நடத்துபவராக, மற்றும் இவ்வுலகப் பிரச்சனைகளை மட்டும் தீர்ப்பவராகவே அறிந்திருக் கிறது. ஆனால், தேவனை அறியாதது தண்டனைக்குரியது (2தெச 1:7, ரோமர் 1:18,19) அதே போல ஆவிகளை துரத்துகிறோம் அற்புதங்களை செய்கிறோம் என்பவர்களை இயேசு, அக்கிரமச் செய்கைக்காரர் (மத். 7:21,23) என்று தான் அழைப்பார். இது தெரியாமல் அநேகர் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய மகிமையை தடுப்பதே பிசாசின் தந்திரமாக இருக்கிறது. பிசாசை எதிர்க்க நமக்கு திராணி வேண்டும் என்றும், அவனை நாம் எதிர்த்து நிற்க வேண்டும் என்றும் புதிய ஏற்பாட்டு உபதேசம் தெளிவாக எடுத்துச் சொல்கிறது (எபேசி 6:11, யாக் 4:7) எப்படி அவனுக்கு எதிர்த்து நிற்பது? நமதாண்டவர் இயேசுவே நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு முன் மாதிரியாகும். மனிதன் எடுக்கும் நல்ல தீர்மானங்களை தடை செய்வது பிசாசின் முக்கிய வேலை யாக இருக்கிறது. ஆண்டவர் இயேசு ஊழியம் செய்ய ஆரம்பித்த போது பிசாசானவன் மூன்று விதங்களில் தடைகளைக் கொண்டு வந்ததையும் இயேசு வானவர் அவைகளை **தேவனுடைய வசனத்தினால்** வென்றதையும் நாம் அறிவோம்.

இன்றைக்கும் சில மக்கள் தங்கள் வயிற்றுப்பசிக்காக கேவலமான வேலைகளை செய்ததாகக் கூறுவதைக் கேட்கிறோம். பொய், திருடு, விபசாரம் போன்ற தேவனுக்கு விரோதமான செயல்களை பிசாசு தந்திரமாக ஏமாற்றி புகுத்துவதை நாம் அறிந்து போதிக்க வேண்டும். அதே போல் பெருமைக்காக மக்களை சிக்கலுக்கு உட்படுத்துவதும் அவனுடைய தந்திர மாகும். ஜீவனத்தின் பெருமை உலகத்தால் உண்டானது பிதாவினால் உண்டாகவில்லை (1யோவான் 2:15-17). ஆகவே கடன் வாங்கி நம் பெருமையை நிலை நாட்ட வேண்டிய அவசியம் கிறிஸ்தவனுக்கு இல்லை நமக்கு இருக்கிறவைகள் போதும் என்று எண்ணி தேவ சித்தப்படி நடப்போமாக. தேவனை வணங்க வேண்டிய விஷயத்தில் நாம் எச்சரிக்கை யாய் இருந்து எக்காரணத்தைக் கொண்டும் சபைக்கூடி வருதலை விட்டு விடாதிருப்போம். ஆக புதிய ஏற்பாட்டு உபதேசமே பிசாசை எதிர்க்க சரியான ஆயுதமாகும்.

கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்பவர்களை பிதாவானவர் கனம் பண்ணுகிறார் (யோவா 12:26) ஊழியர்களுக்கு விசுவாசிகளை உலகப் பிரகாரமான சகல நன்மைகளிலும் உதவியாக இருக்க வேண்டும் (கலாத் 6:6) என்று பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட வேத வசனங்கள் கூறப்பட்டிருக்க கிறிஸ்துவின் சபையில் சிலர் ஊழியர்களுக்கு இடைப்பட்ட நாட்களில் எந்த பொருளுதவியும் செய்யத் தேவையில்லை, காணிக்கையாக வாரத்தின் முதல் நாளில் சபையில் மட்டுமே செலுத்த வேண்டும் என துணிகரமாக போதிக்கின்றனர். ஊழியர்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளை தடை செய்தல் சாத்தானுடைய வேலையாகும் (ரோம 1:13, 1 தெச 2:18) வாலிபர்களின் வழி அவர்களுடைய பார்வையை சரியானதாக இருப்பினும், அவர்களின் வழி அசுத்தமாய் உள்ளதாக வேதம் சொல்லுகிறது சங். 119:9ன் படி அவர்கள் தேவனுடைய வசனத்தினால் தங்களை காத்துக் கொள்ள வேண்டுமே தவிர, தங்களைப் போன்ற வாலிபர்களின் ஆலோசனையை கேட்பார்களானால் சாலமோன் மகன் ரெகோபெயாமைப் போல் சீரழிந்து போவார்கள். சபை மக்கள் பக்தி விருத்தியடைய சபைக்கூடி வருகையில் அசுவிவாசம், அசட்டை, கீழ்படியாமையுள்ள சிலரைக் கொண்டு பிசாசான வன் அவபக்தியை உண்டாக்குகிறான் (மத். 13:39).

ஆண்டவர் பிசாசை துரத்தின பின்பு ஊமையன் பேசினான் (மத். 9:33) இன்றைக்கும் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் பிசாசின் தந்திரத்தால் வாய் மூடி சுவிசேஷத்தை அறிவியாமல் இருப்பதை காண்கிறோம். ஆனால் சத்தியம் அறியாத நாமகர கூட்டத்தார் தாராளமாக பேசுவைதைக் காண்கி றோம். அது இயேசுவுக்கு பிரயோஜனமானது (லூக். 4:41) சபையில் சொல்லப்படும் நல்ல தேவனுடைய ஆலோசனைகளை பிசாசானவன் எடுத்து போடுகிறான் (மத். 13:19) தேவனுக்குச் சித்தமானால் வாரத்தின் முதல் நாள் பிரசங்கங்களை ஒலிப்பதிவு செய்து இடைப்பட்ட நாட்களில் அவைகளை மறுபடியும் கவனிக்க தூண்டலாம். அவிசுவாசத்தினால் சீஷர்கள் பிசாசை துரத்த முடியாமல் போனபோது ஜெபத்தின் முக்கியத்துவம் ஆண்டவர் உணர்த்துகிறார் (மத். 17:21) தேவனோடு ஐக்கியம் ஜெபத்தில் தான் உறுதிபடுகிறது. எனவே நாம் அதற்கென்று நேரம் ஒதுக்கி அக்கறையோடும், ஈடுபாட்டுடனும் ஜெபிக்காமற்போனால் பிசாசின் தந்திரங்களை முறியடிக்க முடியாது. பிசாசின் மற்றொரு தந்திரம் தேவனுக்கு விரோதமானவற்றை வேடிக்கை, கேலி, காமெடி என்ற பெயரிலும் நாகரீகம் என்ற பெயரிலும் மனிதர்களுக்குள் புகுத்துவது. கெட்ட வார்த்தை உங்கள் வாயிலிருந்து புறப் படலாகாது என்று உபதேசம் தெளிவாக இருந்தும் சிரிப்பதற்காக சிலர் அதைப் பயன்படுத்துவதையும் தாங்கள் நியாயமாக கோபப்படுவதாகச் சொல்லி அதைப் படுத்துவதையும் காண்கிறோம். பெரியர்வகளைப் பார்த்து சிறுகுழந்தைகள் அவைகளைக் கற்றுகொண்டு சொல்லும் போது அதிர்ச்சி யடைய வேண்டிய பெரியவர்கள் அப்படி யில்லாமல் அதை ரசித்து மகிழ் வதும் பிசாசின் தந்திரமே.

லூக்கா 8:35ல் பிசாசு நீங்கின மனிதன் நன்றாக வஸ்திரம் "அணிந்து கொண்டான்" என்று காண்கிறோம். தகுதியான வஸ்திரம் உடுத்த வேண்டும் என்றும் ஆண்கள் ஆடையை பெண்கள் அணியக்கூடாது என்றும் வேதம் தெளிவாக எடுத்துச் சொல்லியும் (உபாக 22:5, 1 தீமோ 2:9,10) கிறிஸ்தவ பெண் பிள்ளைகளில் சிலர் ஆண்களின் பேண்ட் அணிவதும் பிசாசின் தந்திரம் என்று நாம் புரிந்து போதிக்க வேண்டும். எங்கெல்லாம் அரைகுறை ஆடைகள் இச்சையைத் தூண்டும் வண்ணம் உள்ளதோ அதன் பின்னணியில்

பிசாசு இருக்கின்றான்! பொதுவாக சில கிறிஸ்தவ வாலிபப் பிள்ளைகள் வேதாகமப் புத்தகத்தை சபைக்கு கொண்டு வரக்கூட வெட்கப்படுகிறார்கள். உலக அறிவுக்கு பள்ளி புத்தகத்தை சுமந்து செல்வதைக் காட்டிலும் வேதத்தை நீ சுமந்தால் உன் வாழ்வில் எல்லாம் பிற்பாடு வேதமே உன்னைச் சுமக்கும் என்பதை நினைவில் வை! இச்சமுதாயத்தில் பிசாசின் பிடியில் தலைக் குனிவாக இருந்த அநேக வாலிப ஸ்திரீகள், இளைஞர்கள் ஆண்டவர் இயேசுவால் தலைநிமிர்ந்து வாழ்கிறார்கள் (லூக்கா 9:42) தன்னைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கி தான் ஒன்றுக்கும் உதவாதவனாக காண்பிப்பதுதான் பிசாசின் வேலை. ஆனால் நம்மைத் தாழ்விலிருந்து உயர்த்தி தமது குமாரனின் விலையேறப்பெற்ற ரத்தத்தினால் நம்மை விலை கொடுத்து வாங்கி, அகில உலகத்தையும் படைத்தவருக்கு நம்மையும் குமாரராகவும், குமாரத்திகளாகவும் நமக்கு இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்தி அழகு பார்ப்பவர் நம் பரலோகத்தின் தேவனல்லவா? அவரே நம்மை தமது அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு (கிறிஸ்துவின் சபைக்கு) உட்படுத்து பவர் (கொலே 1:13) தேவனை அறிந்து வாழும் வாழ்க்கை, தன்னம்பிக்கை மற்றும் மன உறுதியுடைய வாழ்க்கையாகும்.

கிறிஸ்தவர்கள் தேவனுக்கு முதலிடம் கொடாமல், சபை கூடுதலுக்கும், வேத வகுப்புகளுக்கும் இடங்கொடாமல், உலகப் பொருளை முக்கியத்துவப் படுத்துவார்களானால் அதுவும் விக்கிரக ஆராதனையே (எபே 5:5) இதுவும் பிசாசின் தூண்டுதல் (யோவா 13:2) என்பதை நாம் உணர்ந்து ஜாக்கிரதையாய் நடக்க வேண்டும். நரகம் பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்குமே உண்டாக்கப்பட்டது (மத். 25:41) கெட்டுப்போகிறவன் தன்னோடு சேர்ந்து மற்றவரையும் கெடுப்பது பிசாசின் வேலையாகும் (வெளி. 12:12). குடும்பம் என்பது தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாக உள்ளது! அதில் இருப்பவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற சட்டதிட்டங்களும் உபதேசிக்கப்பட்டுள்ளது. எனவே மனைவியினிடத்தில் அன்பு கூராதவன், புருஷனிடத்தில் பயபக்தியாய் இராதவள், பிள்ளைகளைக் கோபப்படுத்தும் பெற்றோர், பெற்றவருக்குக் கீழ்படியாத பிள்ளைகள், அதிகாரிகளுக்கு கீழ்படியாதவர்கள், அரசாங்கத்திற்கு எதிர்த்து நிற்பவர்கள், பெரியோரை மதிக்காதவர்கள் யாவரும் பிசாசின் மறைமுகப்பிடியில் செயல்படுபவர்கள் என்பதை வேதம் நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. கணவன், மனைவிக்குள் கௌவுரவம், ஈகோ பார்க்க கோபக் குணத்திற்கு விலகி யிருந்து ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் முன்னேற கடும் முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற அருமையான ஆத்துமாக்க ளையும் பிசாசு வஞ்சித்து உண்மை உபதேசம் அடங்கிய கிறிஸ்துவின் சபை யிலிருந்து விலகிவிடும் சூழ்நிலையை உருவாக்குகிறான் (2கொரி 11:3) இப்படிப்பட்ட பொய்யான பிசாசுகளின் உபதேசங்களுக்கு நாம் விலகி யிருக்க வேண்டும் (1தீமோ 4:1) இந்த வாழ்க்கையில் நாம் விசுவாசிகளா யிருக்க போராட வேண்டியிருக்கிறது என்பதை உணர்ந்து பிசாசின் தந்திரங் களுக்கு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாய் வாழ தவறாமல் நாம் சபைக்கூடிக் கிறிஸ்துவின் ஐக்கியத்தில் நிலைத்திருந்து விசுவாசத்தின் நல்ல போராட்டத் தைப் போராட பரலோகத்தின் தேவன் தாமே நம் அனைவரையும் பெலப்படுத்து வாராக. ஆமென்!

**K. பாண்டியன்**, பாண்டிச்சேரி.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபையிலிருந்தும், புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்தும் வழிவிலகிச் செல்லுதலைப் பற்றிய தேவனுடைய குறிப்பிடத்தக்க தீர்க்க தரிசனங்கள் எப்படி நடந்தேறும் என்று தேவன் சொன்னாரோ அப்படியே துல்லியமாக நடந்தேறியதை நாம் படித்துக் கொண்டிருக்கிறோம். நாம் ஏற்கனவே பார்த்தபடி, அதில் சோகமான முன்னேற்றங்களுள் ஒன்று என்னவென்றால் ரோமன்கத்தோலிக்க சபையின் உருவாக்கம். கடந்த மாதம் நாம் பாடத்தை முடித்த போது, அந்த சபையின் சில வரலாறுகளை 606-1520 கி.பி வரை நாம் விவரமாக ஆராய்ந்தோம்.

சுமார் 1198-ல் சக்தி வாய்ந்த போப்களில் ஒருவராயிருந்த இன்னஸன்ட்III தன்னுடைய ஆட்சிக்காலத்தைத் தொடங்கினார் என்று கடந்த மாதம் நாம் படித்ததை நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள். அவர் இப்படியாகச் சொன்னார். “பரிசுத்த பேதுருவின் வாரிசு தேவனுக்கும், மனிதனுக்கும் மத்தியில் நிற்கிறார் தேவனுக்குக் கீழே, மனிதனுக்கு மேலே எல்லோருக்கும் நியாயாதிபதியாக இருக்கிறார்; ஆனால், அவர் யாராலும் நியாயந்தீர்க்கப்படுவதில்லை”. இந்த வாக்கியத்தை நாம் பல்வேறு வசனப் பகுதிகளோடு ஒப்பிட்டு இந்த பகிரங்கமான அறிவிப்பு எவ்வளவு தூஷண மானது என்று பார்த்தோம். ஆனால், இந்த பகிரங்க அறிவிப்பு கூட வரலாற்று உண்மைகளோடு முரண்படு கிறது.

உதாரணமாக, கி.பி 1309 - 1377 காலக்கட்டத்தில் பிரான்ஸ் தேசத்திற்கு இந்த “போப்கள்” சிறைபிடிக்கப்பட்டுச் சென்றார்கள். எனவே தங்களை எல்லா மனிதர்களுக்கும் மேலாகச் சொல்லிக் கொண்டவர்கள் பிரான்ஸ் நாட்டுத் தலைவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள்.

இதோ வேறு சில வரலாற்று உண்மைகள் கி.பி. 1300 - 1400 வரை இந்த சபையை எதிர்த்தவர்கள் கொலை செய்யப்பட்டு, மரத்தூணிலே வைத்து எரிக்கப்பட்டார்கள். இவ்விதமான நடத்தைகளை தேவன் ரோமர் 12:17-21 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறவைகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள். இந்த வசனங்களில் தேவன் மற்றவர்கள் நமக்கு தீமை செய்தாலும், நாம் பதிலுக்கு அவர்களுக்கு தீமை செய்யக்கூடாது. கூடுமானால் நம்மாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருக்க வேண்டும் என்றும் மேலும், பிறர் நமக்குத் தீமை செய்யும் போது கோபப்பட்டு அவர்களை நாம் பழிவாங்கக்கூடாது என்றும் தேவன் கட்டளையிடுகிறார்.

நாம் மற்றவர்ளை பழிவாங்குவதை தவிர்ப்பது எப்படி? அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் தேவன் நமக்குத் தீமை செய்தவர்களை பழி வாங்குவார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, நாம் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்து தேவன் அவர்களை பழிவாங்க அனுமதிக்க வேண்டும். ஏனென்றால், அவரே சர்வ ஞானியும் நியாயந்தீர்க்க உரிமையுள்ளவராயிருக்கிறார்!.

ஆனால் தேவன் நம்மிடமிருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறார் பிரியமானவர்களே! நம்முடைய சத்துருக்களுக்கும் நாம் நன்மை செய்ய வேண்டும் என்று நமக்கு கட்டளையிடுகிறார். இதில் அவர்களுக்கு ஆகாரம் கொடுப்பதும், தண்ணீர் கொடுப்பதும் உள்ளடக்கம். இப்படி நாம் செய்வதினால் அக்கினித்தழலை அவர்கள் தலையின்மேல் குவிப்போம். அதாவது, அவர்கள் நமக்கு செய்த தீமைக்கு பதில் நாம் தீமையைச் செய்யாமல் நன்மையைச் செய்தால், அது அவர்களை வெட்கமடையச் செய்து நாம் இப்படியாக நடந்து கொள்ள எது தூண்டுகோலாக இருந்தது என்பதை விசாரணை செய்ய அவர்களை உற்சாகப்படுத்தும். இவ்விதமாக நாம் செய்வதினால் நாம் தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினால் வெல்ல முடியும்.

அடுத்ததாக கி.பி. 1378 - 1417 வரை ஒரே நேரத்தில் மூன்று போப்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள் அர்பன் II இங்கிலாந்தில், கிலமென்ட் VII ஸ்பெயினில், ஸ்காட்லாண்டில், மற்றும் பிரான்ஸில் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். மார்ட்டின் V ரோமக்கத்தோலிக்க சபை முழுவதும் ஆட்சி செய்து கொண்டிருந்தார்.

அதன் பின்பு கி.பி. 1400-1500 வரை இந்த சபையின் மதத் தலைவர்கள் மத்தியில் ஊழலும், ஒழுக்கக்கேடும் தலைவிரித்தாடியது.

இது இயேசு தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்த புதிய ஏற்பாட்டு சபையைப்போல் காணப்படுகிறதா?

## சீர்திருத்தம் (1521 - 1600)

இது சபை வரலாற்றில் சுருக்கமான கண்ணோட்டத்தின் மற்றுமொரு முக்கியமான பகுதியாகும். இது கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபையிலிருந்து விழுந்து போன ரோமக்கத்தோலிக்க சபையை சீர்திருத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளாகும்.

முதலில் அந்த சபையை மாற்றுவதற்கு சீர்திருத்த காலத்துக்கு முன்பே எடுக்கப்பட்ட முயற்சிகளை நாம் பார்க்கலாம். 1217ல் பீட்டர் வால்டோ என்பவர் அந்த சபைக்கு அல்ல வேதாகமத்திற்கு மாத்திரமே அதிகாரம் இருக்கிறது என்று சொன்னார். அவர் ரோமக்கத்தோலிக்க ஆராதனையையும், சுத்திகரிப்பு ஸ்தலத்தையும், இறந்தவர்களுக்காக செய்யப்படும் ஜெபங் களையும் வெளிப்படையாக குற்றஞ்சாட்டினார்.

ஜான் வைகிளிப் என்பவர் 1320 - 1384 வரை வாழ்ந்தார். இவர் வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவர் சபை பாரம்பரியங் களல்ல உபதேசத்தை வேதாகமத்தை மாத்திரம் அடிப்படையாக வைத்தே அமைக்க வேண்டும் என்று சொன்னார்.

ஜான்ஹஸ் என்பவர் 1370 - 1415 வரை வாழ்ந்தார் இவர் போப்பிட மிருந்து வந்த ஆணைகள், முடிவுகளைக் காட்டிலும் வசனங்களுக்கு நேரடியாக வேண்டுகோள் விடுத்தார். அவர் இப்படியாகச் சொன்னார். “ஆதி திருச்சபையில் மூப்பர்களும், உதவிக்காரர்களும் மாத்திரமே இருந்தனர். மேலும், அவர் சபையானது அரசாங்கத்தோடு சேர்ந்து இருக்காமல் தனியாக இருக்க வேண்டும்” என்றார்.

அடுத்ததாக அந்த சீர்திருத்த காலத்தில் வாழ்ந்த சில முக்கிய கதாபாத்திரங்களை பார்க்கலாம். மார்ட்டின் லூதர் ஜெர்மனியில் 1483 - 1546 வரை வாழ்ந்தார். அவர் ஒரு தைரியசாலி என்பதில் எந்த சந்தேகமும் இல்லை!.

அவர் கத்தோலிக்க சபையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சபைக்கு பணம் கொடுத்து மன்னிப்பு அல்லது இரட்சிப்பை வாங்குவதை எதிர்த்தார். மேலும் போப்களின் அதிகாரத்தையும், பாதிரியார்களின் ஊழலையும், ஒழுக்கக்கேட்டையும் எதிர்த்தார். அவைகள் எல்லாம் மெச்சத்தக்க முயற்சிகள்!

ஆயினும் மார்ட்டின் லூதர் விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பு என்கிற போதனையையும் போதித்தார். இது நற்கிரியைகளினால் மாத்திரம் இரட்சிப்பு என்கிற கத்தோலிக்க போதனைக்கு முற்றிலும் எதிரானது. கத்தோலிக்க சபை இந்த உபதேசத்தை எந்த புதிய ஏற்பாட்டு அதிகாரமுமின்றி உருவாக்கியது. நாம் ஏற்கனவே படித்தது போலவே தேவன் விசுவாசத்தினால் மாத்திரம் என்ற போதனையையோ அல்லது நற்கிரியைகளினால் மாத்திரம் என்கின்ற போதனையையோ போதிக்கவில்லை. நாம் ஜீவனுள்ள, கீழ்ப்படிகிற விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறோம்.

மேலும், மார்ட்டின் லூதர் அவர்கள் வசனத்தால் குறிப்பாக ஒரு உபதேசம் தடைபட்டாலொழிய வேறு எவ்விதத்திலும் எந்த உபதேசமும் தடை செய்யபடக்கூடாது என்று போதித்தார். ஆனால், இந்த அணுகு முறையானது வேதத்திற்கு புறம்பான பழக்கங்களாகிய குழந்தை ஞானஸ்நானம், தேவனை ஆராதிக்கும் போது இசைக்கருவிகளை வாசிப்பது போன்றவைகளுக்கு வழிவகுத்து விட்டது.

இந்த தவறான உபதேசத்தை வித்தியாசப்படுத்தி கொலே 3:17ல் நாம் எதை போதித்தாலும், எதைச் செய்தாலும் கிறிஸ்துவின் அதிகாரத்தை உடையவர்களாக இருக்க வேண்டும். ஆகவே நாம் போதிப்பவர்களுக்கு, அப்பியாசப்படுத்துபவைகளுக்கு கிறிஸ்துவின் அதிகாரத்தை கண்டு கொள்ள புதிய ஏற்பாட்டுக்கு செல்ல வேண்டும்.

நாம் ஏற்கனவே படித்த படி நாம் ஆவிக்குரிய பாடல்களை பாடும் போது இசைக்கருவிகள் இல்லாமல் பாடுவதைத்தான் அங்கீகரிக்கிறார். எனவே நாம் ஆவிக்குரிய பாடல்களை பாடும் போது இசைக்கருவிகளை வாசிக்கக் கூடாது என குறிப்பாக வசனம் இல்லாவிட்டாலும், இசைக் கருவிகளை வாசிப்பதற்கு நமக்கு எந்த அதிகாரமும் இல்லை. எனவே பாடல்கள் பாடும் போது இசைக்கருவிகளை வாசிப்பது பாவமாகும்.

அதைப்போலவே, விசுவாசம் உண்டாகத்தக்க தேவனுடைய வார்த்தைகளை கேட்பவர்களுக்கும், தங்களுடைய பாவங்களை குறித்த தேவனுக்கேற்ற துக்கம் உடையவர்களுக்கும், பாவங்களிலிருந்து மனந்திரும்புபவர்களுக்கும், கிறிஸ்துவில் உள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்பவர்களுக்கும் மாத்திரம் ஞானஸ்நானம் கொடுக்க கிறிஸ்துவிடமிருந்து நாம் அதிகாரம் பெற்றிருக்கிறோம் (அப். 18:8), (2 கொரிந்தியர் 7:10) (ரோமர் 10:9,10) (ரோமர் 6:3,4), குழந்தைகளால் இவைகளைச் செய்ய முடியாது. எனவே குழந்தை ஞானஸ்நானத்தை தேவன் தடை செய்வதாக குறிப்பான

வசனம் நமக்கு இல்லையென்றாலும், அப்படிச் செய்வதற்கு கிறிஸ்துவிட மிருந்து நமக்கு அதிகாரம் இல்லாதபடியினால் அப்படிச் செய்தால் அது பாவமாகும்!.

எனவே, மார்ட்டின் லூதர் தைரியமான மனிதனாக இருந்த போதிலும் தேவனோடும், அவருடைய வசனத்தோடும் அநேக முக்கியமான உபதேசங்களில் முரண்படுகிறார்.

மற்றுமொரு முக்கிய சீர்திருத்தவாதி "சுவிங்க்லி" என்பவராகும். அவர் சுவிட்சர்லாந்தில் 1484 - 1531 வரை வாழ்ந்தார். அவர் **ஒரே அதிகாரம்** வேதாகமம் என்று போதித்தார். எனவே, வேதாகமத்தினால் அங்கீகரிக்கப் பட்டவைகள் மாத்திரமே சபையில் உபயோகபடுத்தப்பட முடியும் என்று போதித்தார்.

சுவிங்க்லி இரட்சிப்பு விசுவாசத்தினால் என்று போதித்தார். விசுவாசத் தினால் மாத்திரம் அல்ல. மேலும் அவர் ரோமக்கத்தோலிக்க சபையினால் ஏற்படுத்தப்பட்ட நற்கிரியைகளினால் எந்த மதிப்பும் இல்லை என்று சொன்னார். அவர் கத்தோலிக்க ஆராதனை முறைமைகளில் மேல் விசுவாசம் வைக்க வில்லை. கத்தோலிக்க சபை போதிக்கின்றபடி அப்பமும், திராட்சை இரசமும் உண்மையான இயேசுவின் சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுகிறது என்ற போதனையை மறுத்தார்.

சுவிங்க்லி அவர்கள் சபைக்கு ஒரே ஒரு தலைதான் உண்டு அது இயேசு கிறிஸ்து என்று அறிவித்தார். மேலும், இவர் மதத்தலைவர்கள் திருமணம் செய்யலாம் என்றும் இறந்த பரிசுத்தவான்களிடத்தில் ஜெபம் பண்ணுவதும், அவர்களுக்கு சொரூபம் செய்வதும் வேதத்திற்கு புறம்பானது என்று போதித்தார். அதோடு ஆராதனையில் இசைக்கருவிகளின் பயன்பாடு வேதத்திற்கு புறம்பானது என்று போதித்தார். 1524ல் ஆராதனையிலிருந்து இசைக்கருவிகளை அவர் நீக்கிப்போட்டார்.

அநேக விதங்களில் மார்ட்டின் லூதரைக்காட்டிலும் சுவிங்க்லி அவர்கள் சத்தியத்திற்கு நெருக்கமானவராக இருந்தார்.

மார்ட்டின் லூதர் தொடங்கி, இன்று மத உலகில் காணப்படுகின்ற லுத்தரன், மெதடிஸ்ட், பேப்டிஸ்ட், பெந்தெகொஸ்தே, தென்னிந்திய திருச் சபை, வட இந்திய திருச்சபை ஆகியன உருவாகின.

ஆயினும், அநேக சீர்திருத்தவாதிகளிடம் இருந்த முக்கிய பிரச்சனை என்னவென்றால், அவர்கள் அப்போதிருந்த விழுந்து போன கத்தோலிக்க சபையை சீர்திருத்தத்தான் முயற்சி செய்தார்கள். பெரும்பாலும், அவர்கள் தூய புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்திற்கு திரும்பிச் செல்ல பாடுபடவில்லை.

ஆகவே, இன்று நீங்கள் உட்ப்பட எல்லா ஜனங்களுக்கும் ஓர் வேண்டுகோள். நாம் ப்ராடஸ்டன்ட் சபைகளை கடந்து, ரோமகத்தோலிக்க சபையைக் கடந்து முதல் நூற்றாண்டிலே இயேசு தம்முடைய இரத்தத்தை சிந்தி கட்டின அந்த ஒன்றான மெய் சபையாகிய கிறிஸ்துவின் சபைக்கு திரும்பிச் செல்வோம். நாம் ஏற்கனவே பார்த்தபடி அந்த சபையை தேவன் புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் தெளிவாக விவரித்திருக்கிறார்.

***Charlie Dipalma*** ***Benny Martin***

# இரத்த சாட்சிகள் தொடர் கட்டுரை

## பாடம் - 11 துரோகியான யூதாஸ்

I. **இவரது வாழ்க்கைக் குறிப்பு :** இவர் சீமோன் என்பவனின் மகன். (யோ 6:71) இவரது சொந்த ஊர் கீரியோத். யூதா என்ற பெயரில் இரண்டு அப்போஸ்தலர்கள் காணப்பட்டதால் (யோ 14:22) இவனை யூதாஸ் காரியோத் என்று அவனது ஊர் பெயரோடு அழைக்கப்பட்டான். இந்த கீரியோத் என்ற ஊர் யூதா நாட்டின் தெற்கே உள்ளது. இவனைத் தவிர மற்ற 11 அப்போஸ்தலரும் கலிலேயா நாட்டைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவன் யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்புதலுக்கென்று ஞானஸ்நானம் பெற்றிருந்தான். பின்பு யோவானின் சாட்சியினிமித்தம் இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தினால் கவரப்பட்டு இயேசுவின் சீஷரானார்.

அப்போஸ்தலப் பெயர் பட்டியலில் இவனது பெயர் கடைசியாக உள்ளது மத்தேயும், மாற்குவும் இவரை அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் கரியோத்து என்று குறிப்பிட்டுள்ளனர் (மத். 10:4, மாற் 3:19) ஆனால் லூக்கா இவனை துரோகி என்றும் (லூக் 6:16) யோவான் இவனை திருடன் என்றும் குறிப்பிடுகின்றனர் (யோ 12:6) இவன் அப்போஸ்தலனாக அழைக்கப்பட்ட போது உண்மையுள்ளவனாகத்தான் இருந்தான் ஆதலால் தான் பணப்பை சுமக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது. யூதேயாவிலிருந்து தேர்ந்தெடுக் கப்பட்ட ஒரே அப்போஸ்தலன் என்ற பெருமையும், செல்வாக்கும் இருந்தது. ஆதலால் பொருளாளராக நியமிக்கப்பட்டிருந்தார்!.

II. **யூதாஸ் சாத்தானுக்கு இடம் கொடுத்தல் :** சாத்தான் எப்பொழுதுமே தேவனுடைய திட்டத்திற்கு விரோதமானவன். தேவனுடைய திட்டத்தை அழிக்க தேவனுடைய பிள்ளைகளையே உபயோகப்படுத்துகிறவன். அது அவனது தந்திரமான செயலாகும். இதை அறிந்த நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சாத்தானுக்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும். ஏனென்றால், சாத்தான் மனுஷனுடைய சுபாவத்தை அறிந்து அவனுக்குள் புகுந்து பாவம் செய்ய ஏவுகிறான். இதிலே சிக்குண்டு பாவம் செய்யும் பொழுது சாத்தானுக்கு அடிமையாகிறான்.

யூதாஸ் 12 சீஷருக்குள் பணப்பையையும் அதிலே போடப்பட்ட பொருட்களை சுமக்கிறவனானபடியால் (பொருளாளர்) பொருளாசைக்கு தன்னை ஒப்புக்கொடுத்தான். எனவே தான் மரியாள் என்ற ஸ்திரீ விலையேறப் பெற்ற பரிமள தைலத்தை இயேசுவின் பாதத்திலே பூசி அவரை மகிமைப் படுத்தும் பொழுது யூதாஸ் விசனமடைந்து இந்த தைலத்தை 300 பணத்துக்கு விற்று தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான் (யோ 12:4,5) அன்றைய நாட்களில் ஒரு நாள் கூலி ஒரு பணம். அப்படி என்றால் 300 பணம் என்பது ஒரு மனிதனுடைய ஒரு ஆண்டு வருமானமாகும் (மத். 20:1,2) யூதாஸ் உண்மையிலேயே தரித்திரரைக் குறித்துக் கவலைப்படாமல் அவன் திருடனானபடியினாலும், பணப்பையை சுமக்கிறபடியினாலும் இப்படிச் சொன்னான் (யோ 12:6) இந்த வசனப்பகுதி யூதாஸ் பண ஆசைக்கு, பொருளாசைக்கு உடன்பட்டிருக்கிறான் என்று கூறுகிறது. எனவே சாத்தான் யூதாசுக்குள் புகுந்தான் (லூக். 22:3).

இவ்வுலகத்திலுண்டானவைகளான கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகிய இவைகளுக்கு நாம் உடன்படும் பொழுது சாத்தான் நமக்குள்ளும் புகுந்து பாவஞ்செய்ய தூண்டுவான் என்பது நிச்சயம். ஏனென்றால், சாத்தானும் ஆவியாயிருக்கிறான் அவன் எங்கும் யாருக்குள்ளும் புகுந்து கொள்வான்! அப்படியே யூதாசுக்குள்ளும் சாத்தான் புகுந்தான்.

**III. யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்தல் :** செயல்களிலேயே மிகவும் மோசமான செயல் ஒருவரைக் காட்டிக் கொடுக்கும் செயல் தான். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது (1தீமோ 6:10) யூதாஸ் பண ஆசையினாலே பிரதான ஆசாரியரிடத்திலும், சேனைத் தலைவர்களிடத்திலும் போய் அவரைக் காட்டிக் கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான். அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன் நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அதற்கு அவர்கள் சந்தோஷப்பட்டு அவனுக்கு முப்பது வெள்ளிக் காசுக் கொடுக்க உடன்பட்டார்கள். அதுமுதல் யூதாஸ அவரைக் காட்டிக் கொடுக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்! (மத். 26:15,16).

பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று என்னை வஞ்சித்து அதினாலே என்னைக் கொன்றது (ரோம 7:11) என்ற வார்த்தையின்படி யூதாசுக்கு நேரிட்டது. காட்டிக் கொடுத்தல் என்பது தன்னை நம்பியிருக்கிறவருக்குச் செய்யும் துரோகமாக உள்ளது. என் பிராண சிநேகிதனும் நான் நம்பினவனும் என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும் என் மேல் தன் குதிங் காலைத் தூக்கினான் என்று யூதாசைக் குறித்து வேத வாக்கியம் கூறுகிறது (சங். 41:9) இயேசுவோடு 12 சீஷர்களும் கடைசி பந்தியிருக்கும் போது அவர் உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்றார். அப்பொழுது அவர்கள் மிகவும் துக்கமடைந்து அவரை நோக்கி ஆண்டவரே நானோ, நானோ என்று கேட்கத் தொடங்கினபோது, யூதாசும் அவரை நோக்கி ரபீ நானோ? என்றான் அதற்கு அவர் நீ சொன்னபடி தான் என்றார் (மத். 26:21-25) நீ செய்கிறதைச் சீக்கிர மாய்ச் செய் என்றார். அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை யூதாஸ் பணப்பையை வைத்துக் கொண்டிருந்தபடியினால், அவன் போய், பண்டிகைக்குத் தேவை யானவைகளைக் கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என்று நினைத்தார்கள்! (யோ 13:27-29).

யூதாஸ் முப்பது வெள்ளிக் காசுக்கு ஆசைப்பட்டு ஆண்டவரைக் காட்டிக் கொடுத்தான். முப்பது வெள்ளிக்காசு என்பது ஒரு சாதாரணத் தொழிலாளியின் நான்கு மாதச் சம்பளமாக இருந்தது. ஒரு அடிமைக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையாக இருந்தது!. விலையேறப் பெற்ற இயேசுவை ஒரு அடிமையின் விலைக்கு ஒப்பாக நினைத்துவிட்டான் யூதாஸ்! அவரைக் காட்டிக் கொடுக்க இரவு நேரத்தை தெரிந்து கொண்டான் (யோ 13:30) அந்த இரவு நேரத்தில் இயேசு யூதாஸ் மனந்திரும்புவதற்கான வாய்ப்பும் கொடுக்கிறார். மனுஷ குமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார் ஆகிலும் எந்த மனுஷரால் மனுஷ குமாரன் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ அந்த மனுஷனுக்கு ஐயோ! அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார் (மத். 26:24).

கெத்சமனே தோட்டத்தில் இயேசு வியாகுலப்பட்டு ஜெபம் பண்ணும் பொழுது மற்ற சீஷர்கள் உறங்கினார்கள் (மத். 26:40) ஆனால் யூதாசோ உறங்கவில்லை. யூதருடைய சங்கத்தாரிடம் தான் ஒப்புக் கொண்டபடி செய்ய முனைப்புடன் இருந்தான். இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாஸ் கையாண்ட விதம் ஒரு சீஷன் தனது குருவை ரபீ வாழ்க என்று வாழ்த்துச் சொல்லி முத்தமிடும் விதத்தைக் கையாண்டான் (மத். 26:48,49) இப்படிப்பட்ட முத்தம் மாய்மாலமானது! சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளது. (நீதி 27:6). யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்த விதம் தனது உயிர் நண்பனுக்கு செய்யும் நம்பிக்கைத் துரோகமானதாகும்.

**IV. யூதாஸ் அடைந்த ஆக்கினை :** யூதாசைக் குறித்து இயேசு அந்த மனுஷனுக்கு ஐயோ! என்றார் அந்த மனுஷன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார். யூதாஸின் மாய்மாலத்திற்கும், அவனது பொருளாசைக்கும் நிச்சயம் ஆக்கினை தான் என்றார். (மத். 26:24) ஆனால்

யூதாஸோ தனக்கு வரும் ஆக்கினையைக்குறித்துக் கவலைப்படாமல் தொடர்ந்து ஆக்கினைக்குரியக் காரியத்தில் தன்னை ஒப்புக் கொடுத்திருந்தான்.

இயேசுவைக் கொலை செய்யும்படி யூதர்கள் அவருக்கு விரோதமாக ஆலோசனைப் பண்ணி, அவரைக் கட்டி, கொண்டு போய் தேசாதிபதி யிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள், அப்பொழுது அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ் தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக் காசைப் பிராதன ஆசாரியரிடத்திற்கும், மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டு வந்து; குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ் செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்; எங்களுக் கென்ன அது உன்பாடு என்றார்கள். அப்பொழுது அவன் அந்த வெள்ளிக் காசைத் தேவாலயத்திலே எறிந்து விட்டு, புறப்பட்டுப் போய் நான்று கொண்டு செத்தான்! (மத். 27:1-5).


இயேசுவுக்கு நேரிட்டதைக் குறித்து யூதாஸ் கேள்விப்பட்டவுடன் அதிர்ச்சி அடைந்தான்! யூதர்களிடத்திற்கு இயேசு தப்பித்து விடுவார் என்று நினைத்திருப்பான் ஏனென்றால், ஒரு முறை இயேசு தேவாலயத்தில் உபதேசிப்பதைக் கண்ட யூதர்கள் அவரைப் பிடித்து செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலை கீழாகத் தள்ளி விடும்படிக்குக் கொண்டு போனார்கள். அவரோ அவர்கள் நடுவினின்று கடந்து போய் விட்டார் (லூக் 4:29,30) இன்னொரு முறை அவரைக் கல்லெறியும்படி யூதர்கள் சூழ்ந்த பொழுது அவர் மறைந்து விட்டார். (யோ 8:59) இப்படிப்பட்ட அற்புதங் களை யூதாசும் கண்டிருக்கிறபடியால் தான் காட்டிக் கொடுக்கப்பட்டவுடன் அவர் மறைந்து விடுவார் என்று நினைத்திருக்க வாய்ப்பு இருக்கிறது!. ஆகையால் தான் இயேசு அப்படியொன்றும் செய்யாமல் தன்னை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தது குறித்து யூதாஸ் அதிர்ச்சி அடைந்து மனஸ் தாபப்பட்டான். அவனுடைய மனந்திரும்புதல் தவறான முடிவுக்குக் கொண்டு சென்றது. கொலை செய்யாதிருப்பாயாக! என்ற கட்டளையை மீறி தற்கொலைக்குச் சென்று விட்டான்! யூதாஸ் நான்றுகொண்டு செத்தான்! யூதாஸ் தனக்குத் தானே ஆக்கினையை வருவித்துக் கொண்டான்.

## V. நாம் கற்றுக் கொள்ளும் பாடம்

1. நாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடக்க வேண்டும் (எபே 4:1).
2. சாத்தானுக்கு இடங்கொடுக்காமல் அவனை எதிர்க்க வேண்டும். (யாக். 4:7).
3. நமக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு கீழ்படிய வேண்டும் (ரோம. 6:17)
4. பண ஆசை, பொருளாசை இவைகளுக்கு விலகியிருக்க வேண்டும் (எபே 5:5; 1தீமோ 6:10)
5. நமக்கு இருக்கிறவைகளே போதும் என்று எண்ணி தேவனுடைய வாக்குத் தத்தங்களை விசுவாசிக்க வேண்டும் (எபி. 13:5,6)
6. ஆவிக்குரிய சகோதரர்களைக் காட்டிக் கொடுக்காமல் ஆவியின் ஒருமையைக் கட்டிக்காக்க ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் (எபே 4:3)
7. பொருளாளர் என்ற பதவிக்காக இல்லாமல் பக்திக்காக வாழ வேண்டும் (1 தீமோ 4:8).
8. நம்பிக்கைத் துரோகிகளை விட்டு விலகியிருக்க வேண்டும் (2தீமோ 3:4)
9. நம்முடைய அன்பு மாயமற்றதாக இருக்க வேண்டும் (ரோ 12:9)
10. நியாயத்தீர்ப்பு நாளில் கீழ்படியாதவர்களுக்கு வரும் ஆக்கினையைக் குறித்து பயந்திருக்க வேண்டும். (எபி. 10:27, 1பேதுரு 4:17,19)

(தொடரும்)

K. பாஸ்கர், சிறுமுகை.



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postel Registration No. Erode / 26 / 2006 - 2008
Posted at Erode HPO on 20 th or 21 st of Every Month

## திருமறை ஆசான் இதழ் ஆசிரியரின் திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 6:30 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

**எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.**

இயக்குனர்,

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.